இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 66 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 04ஆம் திகதி வியாழக்கிழமை
(21.09.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 05, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

Special offer
1st to 30th September 2023

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
Cash or Card

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# ஹக்கீம் - பிள்ளையான் கடும் வாய்ச்சண்டை!

## பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடந்த கூட்டத்தில் களேபரம்





நமது விசேட செய்தியாளர்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்த விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நடத்திய தெளிவுபடுத்தல் நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்குமிடையில் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெற்றதாக அறியமுடிகின்றது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்த விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் இன்று வியாழனும் (21) நாளை வெள்ளிக்கிழமையும் (22) பாராளுமன்றத்தில் விவாதத்தை நடத்துவதற்கு ஏலவே தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு இணையாக நீண்ட தெளிவுபடுத்தலொன்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் தலைமையில், பாராளுமன்றக் குழு அறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொலிஸ் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பிரதானி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ், இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடயங்களை முன்வைத்து விளக்கமளித்தார். அப்போது அவரிடம் கேள்வி யொன்றை எழுப்பிய சந்திரகாந்தன், சஹ்ரானின் தம்பி ரிழ்வான் சம்பவமொன்றில் காயமடைந்து வைத்தியசாலையில்... 02 பக்கம்

# பெட் ஸ்கேன் ஸ்தம்பிதம்



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இன்று(20) முதல் பெட் ஸ்கேன்(PET Scan) பரிசோதனையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கதிரியக்க அதிகாரிகளின் பற்றாக் குறையே இதற்கான காரணமென சங்கத்தின் தலைவர் சானக தர்மகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஜீ.விஜேசூரியவிடம் வினவியபோது, சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கமைய பயிற்சிகளை நிறைவு செய்த கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களை ஈடுபடுத்தி இந்த பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

# இந்திய மீனவர்கள் கடும் அத்துமீறல்



மன்னார் நகர் நிருபர்

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து தொடர்ந்தும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதோடு தமது மீன்பிடி வலைகள் உள்ளிட்ட உபகரணங்கள் சேதமாக்கப்படுவதினால் தாங்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாக மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னாரிலுள்ள அலுவலகத்தில் குறித்த நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



ஸஹ்ரான் ஆரம்பிச்சு வச்சது.. எப்போ இந்த சர்ச்சையெல்லாம் முடியுமோ தெரியேல்ல..

# யாழில் திலீபன் நினைவேந்தலை

## தடுக்கும் கோரிக்கை தள்ளுபடி

பு.கஜிந்தன்

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடைவிதிக்கக்கோரி யாழ்ப்பாண பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடைவிதிக்கக்கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த 18ஆம் திகதி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. 02 பக்கம்



# கொலை அச்சுறுத்தல்

## முறையிட்ட மொட்டு எம்.பி.

கடந்த இரண்டு நாட்களாக தனக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வீரசிங்க சபாநாயகரிடம் முறைப்பாடொன்றை செய்துள்ளார்.

நேற்று(20) சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை முன்வைத்து, தனக்கு கடந்த இரண்டு நாட்களாக கையடக்கத் தொலைபேசியில் இருந்து கொலைமிரட்டல் விடுத்து... 02 பக்கம்

## அந்நியன் - அம்பியாக

# தனுஷ்க குணதிலக்க

## விசாரணையில் வெளிவந்த திடுக்கிடும் தகவல்கள்



தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு தொடர்பான வழக்கு விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண் பல அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் தனுஷ்க குணதிலக்க ரி20 உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பங்கேற்பதற்காக கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அவுஸ்திரேலியா சென்றார். 02 பக்கம்

# இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த மட்டக்களப்பு பல்கலைக்கழகம் ஹிஸ்புல்லாஹ்விடம் கையளிப்பு



08பக்கம்

# திலீபனின் நினைவேந்தல் ஊடாக இன முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சி



## தயாசிறி சபையில் சாடல்

திலீபனின் நினைவேந்தல் ஊர்தி பவனிக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் ஊர்தி பவனி வருகிறது.

இந்த சம்பவத்தின் ஊடாக தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு இடையில் முரண்பாடு தோற்றம் பெறும் நிலை காணப்படுகிறது. ஆகவே, அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் கேள்வியெழுப்பினார். 02 பக்கம்

# உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விபரங்களை இன்னும் 2 நாட்களில் வெளியிடுவேன்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான்



உயிர்த்த ஞாயிறு தின குண்டு வெடிப்புத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததற்கு பொறுப்பான அரச அதிகாரிகள் சிலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று (20) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"ஏப்ரல் 21, 2019 அன்று நடந்த தற்கொலைத் தாக்குதல்களுக்கு தலைமை தாங்கிய சஹ்ரான் பற்றிய சில வீடியோ கிளிப்கள் எப்படி கசிந்தன என்பதையும் நான் ஆராய்வேன்"... 02 பக்கம்

# பொருட்களின் விலையை குறைத்தது சதொச




லங்கா சதொச நிறுவனம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலையை குறைத்துள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலைக்குறைப்பை லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, வாடிக்கையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள சதொச விற்பனை நிலையங்களில் விலை குறைக்கப்பட்ட பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

### புதிய விலை விபரம்

ஒரு கிலோ சோயா மீட் இன் விலை 45 ரூபாவினால்... 02 பக்கம்

# காப்புறுதி செய்யப்படாத ஜனாதிபதி செயலக வாகனங்கள்



ஜனாதிபதி அலுவலகத்துக்கு சொந்தமான 28 வாகனங்கள் காப்புறுதி செய்யப்படவில்லை என அண்மைய கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த வாகனங்களில் 13 வாகனங்கள் அதியுயர் பாதுகாப்பு வாகனங்கள் எனவும் ஒரு வாகனத்தின் பெறுமதி 25 முதல் 30 கோடி ரூபா எனவும்... 02 பக்கம்

# கிழக்கு ஆளுநரின் கோழைத்தன அறிவிப்பு

## சபையில் சாடினார் வேலுகுமார் எம்.பி.



''அஹிம்சைவாதியான திலீபனை நினைவுகூருவது சட்டவிரோதமென கோழைத்தனமாக அறிக்கை விடுத்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர், அந்த அறிவிப்பை உடன் மீளப்பெற வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வேலுகுமார். 02 பக்கம்

## உஷ்



ஜனாதிபதி ரணிலுடன் மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித்த அபேகுணவர்தன உட்பட்ட சிலர் அமெரிக்கா சென்றுள்ளதால் இந்த விஜயம் முடிந்து நாடு திரும்பிய கையோடு அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளதாம். அதில் மேற்கண்டவர்களும் இடம்பெறவுள்ளதாக தகவல்.

ரணிலின் அண்மைக்கால அரசியல் வேலைகளால் ஆளுங்கட்சிக்குள் மேலும் பல பிளவுகள் ஏற்படலாமென சொல்லப்படுகிறது.

# ஈரோஸ் பத்திரிகையாளர் உட்பட பிள்ளையான் செய்த கொலைகள் ஆதாரத்துடன் வெளியிடப்படும்

## ஈழவர் ஜனநாயக முன்னணி கட்சி தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு

கனகராசா சரவணன்

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன், முதலமைச்சர் காலத்திலிருந்தே காணி பிடித்தல், ஆள்கடத்தல், கொலை மற்றும் கொள்ளை என்பனவே அவரின் தொழிலாகவிருந்தது. பிள்ளையான் எனது சகோதரன் கோவிந்தராஜன் முதல் எனது பத்திரிகையாளர் வரை செய்த கொலைகளை ஆதாரங்களுடன் கூடிய விரைவில் வெளியிடவுள்ளேன் என இரா.பிரபாகரன் (ஈரோஸ்) தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள வெய்ஸ் ஓப் மீடியாவில் நேற்று புதன்கிழமை (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவமானது திட்டமிடப்பட்டதொன்று என்பது சர்வதேசத்துக்கும் சாதாரண பொதுமகனுக்கும் தெரியும். இச்சம்பவத்தில் பலதரப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். இவ்விடயம் குறித்து சர்வதேச விசாரணை தேவை.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவமானது அரசியல் இருப்பிடத்தை தக்கவைத்து ஆட்சிக் கதிரைகளை கைப்பற்றுவதற்காக அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான செயற்பாடாகும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதியை சிறையில் சந்தித்ததாகவும் அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதியுடன் தொடர்பு இருந்ததாக தான் ஊகித்ததாகவும் ஊடகம் ஒன்றில் பிள்ளையான் தெரிவித்துள்ளார். எனவே ஐ.எஸ்.ஐ.எஸ். என ஊகம் இருந்திருந்தால் ஏன் மேற்படி தகவலை பொலிஸாருக்கு பிள்ளையான் அறிவிக்கவில்லை? எனவே உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன.

இவைகள் விசாரணைக்கு வரவேண்டும்.

பிள்ளையான் தப்பித்துக் கொள்வதற்காக பொதுமக்கள் சிலரை அவரது காரியாலயத்துக்கு பஸ்களில் ஏற்றிவந்து அவர் சொல்வதை சொல்லுமாறு திணிக்கப்பட்டனர். எனவே அவர் மக்களை ஏமாற்றுவதை நிறுத்த வேண்டும். அவர் இன்னும் எவ்வளவு காலத்துக்கு மக்களை ஏமாற்றப்போகிறார்.

நாங்கள் 83,84 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்கின்ற போது மயிலத்தமடு, மாதவனை பகுதியில் 3500 ஏக்கர் நிலப்பரப்பில் 300 குடும்பங்களுக்கு மேல் சேனைப்பயிர்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டன. எனவே தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளைப் பெற்றுக் கொடுக்க தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும்.

ஜனாதிபதி மக்களின் காணிகளை வழங்குமாறு கூறுகின்றார். அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆளுமை கிழக்கு மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் அல்லது தமிழ் அமைச்சர்களுக்கு இருக்கவேண்டும். இன்று அரச அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்கின்றனர். கீழ் மட்டம் முதல் அமைச்சின் செயலாளர் வரை இலஞ்சம் வழங்கவேண்டும். பணத்தை கொடுத்தால் வேண்டியதை செய்யலாம். ஒரு இனத்தின் காணியை பிறிதொரு இனம் சூறையாட முடியாது. அந்தந்த மக்களுக்குரிய காணிகள் அந்தந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் முதலமைச்சர் காலத்திலிருந்தே காணி பிடித்தல், ஆள்கடத்தல், கொலை மற்றும் கொள்ளை என்பனவே அவரின் தொழிலாகவிருந்தது. எனவே அப்பாவிமக்களின் கண்ணீர் இத்தகையவர்களை சும்மா விடாது என்றார்.

# யாழ். மாவட்ட ஆதார வைத்தியசாலைகளில் போராட்டம்




யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட ஆதார வைத்தியசாலைகளில் நேற்று (20) கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.

புத்திஜீவிகள் வெளியேறுவதைத் தடுப்பதிலும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதிலும் தரமான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் இருப்பதை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கத்தின் மெத்தனப் போக்கை கண்டித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் நாடளாவிய ரீதியில் கவன ஈர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன . இதன்படி, கடந்த 12ஆம் திகதி யாழ். மாவட்டம் தவிர்ந்த வட மாகாணத்தில் உள்ள ஏனைய 4 மாவட்டங்களிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.

இந்நிலையில் யாழ். மாவட்டத்திலுள்ள ஆதார வைத்திய சாலைகளான சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை வைத்தியசாலைகளில் நேற்று (20) முற்பகல் 11.30 மணியிலிருந்து 1 மணி வரையிலும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இந்நிலையில் இன்று (21) முற்பகல் 11.30 மணியிலிருந்து 1 மணி வரையில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

# தேசிய மின்சாரத் தேவையில் 70% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஊடாக பூர்த்தி செய்து மின்கட்டணத்தை குறைக்க நடவடிக்கை

## மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த



நாட்டின் 70% மின்சாரத் தேவையை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி, மின் கட்டணத்தை குறைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட 70% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி அந்த இலக்கை அடைய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்பது நாட்டின் மிகப்பாரிய ஆற்றல் மூலமாகும். அதனை அபிவிருத்தி செய்வதன் மூலம் எரிபொருளுக்காக செலவிடப்படும் பணத்தை நாட்டில் தக்கவைத்துக் கொள்ள முடியும். எரிபொருளுக்காக செலவிடப்படும் தொகையை குறைப்பதன் மூலம் மின் கட்டணத்தை குறைக்க முடியும். மேலும், இந்தப் பணத்தை ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.

நாட்டின் 70% எரிசக்தி தேவைக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. எனவே 70% புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்யும் இலக்கை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது, கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்கலங்களின் ஊடாக 685 மெகா வோர்ட், நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்களினால் 140 மெகாவோட், காற்றாலை மின் நிலையங்களின் ஊடாக 263 மெகாவோர்ட், சிறிய நீர் மின் நிலையங்களினால் 434 மெகாவோர்ட் மற்றும் பாரிய நீர்மின் நிலையங்களின் ஊடாக 1573 மெகாவோர்ட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படுகின்றன.

மேலும், சூரிய சக்தி மின்நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் அமைக்க தேவையான இடங்களை அடையாளம் காணும் பணியை நிலைபெறு தகு வலு அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

இது தவிர, தற்போது திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் முன்னேற்றத்தை ஆராயவும் அவற்றின் செயற்றிறனை சரிபார்க்கவும் இராஜாங்க அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதனுடன், திட்டங்களுக்கு மிகக் குறுகிய காலத்துக்குள் அனுமதி வழங்குவதற்குத் தேவையான நடைமுறைகளைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை இணைப்பதில் ஏற்படும் உறுதியற்ற தன்மையை சமாளிக்க இந்தியாவின் ஊடாக தெற்காசிய மின்சாரக் கட்டமைப்புடன் அதனை இணைக்கத் தேவையான ஆரம்பக்கட்டச் செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டில் எரிசக்தியை மேம்படுத்த சிறந்த திட்டம் தேவை. அதற்காக 2023 முதல் 2026 வரை ஒரு திட்டத்தையும் 2027 முதல் 2030 வரை அதன் தொடரான திட்டமொன்றையும் மின்சார சபை தயாரித்துள்ளது. அதன் அடிப்படையில் தேவைக்கேற்ப உரிய திட்டங்களை மாற்றி நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

உமா ஓயா திட்டப் பணிகள் பல்வேறு காரணங்களால் தாமதமாகி வருகின்றன. ஆனால் தற்போது அதன் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. எனவே, அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அடுத்த மாதத்துக்குள் பிரதான மின்கட்டமைப்பில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, அணுசக்தியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. இதற்கு காலம் பிடிக்கும். ஆனால் அதற்கான சாத்தியக்கூற்று ஆய்வை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

### ஹக்கீம் - பிள்ளையான்

தங்கியிருந்தபோது ரவூப் ஹக்கீம் அவரை சென்று சந்தித்தமை உட்பட பல விடயங்கள் இந்த விசாரணைகளில் உள்ளனவா என்று கேள்வியெழுப்பியதுடன் அவ்வாறு இல்லாவிடின் அவற்றை விசாரிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இதனால் சினமடைந்த மு.கா .தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த விடயங்களுடன் தொடர்பில்லாத விடயங்களை பேசவேண்டாமென கூறியதுடன் அப்படியானால் இதுவரை வெளிவராத பல விடயங்களை தம்மாலும் கூற முடியுமென்று கடுந்தொனியில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இருவருக்கும் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.ஆளுங்கட்சி எம்.பிக்கள் பலர் இருவரையும் கட்டுப்படுத்தி அமைதிப்படுத்தியதையடுத்து அந்த கூட்டம் தொடர்ந்தது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை ஆதாரபூர்வமாக எம்.பிக்களுக்கு பாதுகாப்பு உயரதிகாரிகள் விளக்கியதாக அறியமுடிந்தது.

### கிழக்கு ஆளுநரின்...

பாராளுமன்றத்தில் நேற்று (20) உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

" அகிம்சை வழியில் போராடி உயிர்த் தியாகம் செய்த திலீபனை நினைவுகூர்ந்து வாகன பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கேற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்மீது மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனை தடுக்காமல் பொலிஸார் செயற்படும் விதத்தையும் காணொளிகளில் காணக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் அரசின் பிரதிநிதியாக இருக்கக் கூடிய கிழக்கு மாகாண ஆளுநர், செல்வராசா கஜேந்திரனின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது என கோழைத்தனமாக அறிக்கை விட்டுள்ளார். ஒரு அகிம்சைவாதியை நினைவுகூர்ந்த பாராளுமன்ற உறுப்பினர், வழிமறிக்கப்பட்டு மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு கண்டனம் தெரிவிக்க அவருக்கு முதுகெலும்பில்லை. மாறாக நினைவேந்தலை சட்டவிரோதம் எனக்கூறி கோழைத்தனமாக அறிக்கை விடுத்துள்ளார். ஆளுநரின் செயலை கண்டிக்கின்றோம். அந்த கூற்றை அவர் மீளப்பெற வேண்டும்" என்றார்.

### காப்புறுதி செய்யப்படாத

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தணிக்கை அறிக்கையின்படி, தொடர்புடைய உயர் காப்பீட்டு வாகனங்களின் அதிக மதிப்பு காரணமாக, காப்பீட்டுக்காக ஒவ்வொரு வாகனத்துக்கும் ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய் செலுத்த வேண்டும்.

அதிக செலவு காரணமாக காப்புறுதி செய்யப்படவில்லை என ஜனாதிபதி செயலக கணக்கு அதிகாரி கணக்காய்வாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் பின்பற்றப்படாவிடின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மாற்றுக் கொள்கை முடிவுகளை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### யாழில் திலீபன்...

ஆறு பேரின் பெயர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிட்டு பொலிஸார் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபன் என்பவரை நினைவுகூரும் செயற்பாடு இலங்கை சோசலிச குடியரசின் வர்த்தமானி 1721/2ஐயும் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தேசிய ஒருமைப்பாடுகள் சட்டத்தையும் மீறுவதாகவும் உள்ளது என்றும் நடத்தப்படும் பேரணியை 1979 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் தங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு நேற்று (20) காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இவ்வழக்கை தள்ளுபடி செய்வதாக நீதவான் நீதிமன்ற நீதவான் தெரிவித்தார். இவ் வழக்கில் எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி சுகாஷ் ஆஜராகினார்.

### உயிர்த்த ஞாயிறு தின...

என்று பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி எழுப்பிய கேள்விக்கு டிரான் பதிலளித்தார்.

"இந்த கிளிப்கள் எவ்வாறு கசிந்தன என்பதை என்னால் தெளிவாகக் கூற முடியாது. ஆனால் நான் அதை ஆராய்ந்து சபைக்கு அறிவிப்பேன்" என்று அவர் கூறினார்.

அத்துடன், தாக்குதல்களுக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன பொறுப்பேற்க வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"ஜெயவர்த்தன குற்றவாளி என்று உயர் நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டு இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது" என்றும் அவர் கூறினார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவுகளுக்கு நிலந்த ஜயவர்தன பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று வலியுறுத்திய வேளையில் வாக்குவாதம் ஏற்பட்டது. ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பக்கம் 320 இல் நிலந்த ஜயவர்தன பொறுப்பு என குறிப்பிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.இதன்போதே, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை இன்னும் இரண்டு நாட்களில் வெளியிடுவதாக அமைச்சர் உறுதியளித்தார்.

### கொலை அச்சுறுத்தல்...

அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் வருவதாக பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் நாளை முறைப்பாடு செய்யவுள்ளதாக தெரிவித்தார்.

"1989 ஆம் ஆண்டு நான் ஒரு தாயையும் மகளையும் பாலியல் பலாத்காரம் செய்து கொன்றேன் என்று கூறி இரண்டு முகநூல் பதிவுகள் வெளியிடப்பட்டன. 1989 இல் எனக்கு எட்டு வயது என்றுதான் சொல்ல வேண்டும். சபாநாயகர் தலையிட்டு எனது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

இந்த விடயத்தை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினருக்கு அறிவித்ததுடன், இந்த விடயத்தை பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பி வைப்பதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

### பொருட்களின் விலையை...

குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 580 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 40 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 290 ரூபாவாகும்.

ஒரு கிலோ நெத்தலி மீனின் விலை 30 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1,100 ரூபாவாகும்.

ஒரு கிலோ பூண்டு 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 620 ரூபாவாகும்.

ஒரு கிலோ வெங்காயம் 15 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 195 ரூபாவாகும்.

சிவப்பு பருப்பு 6 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 299 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### அந்நியன் - அம்பியாக...

இதன்போது அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் தனுஷ்க குணதிலக்க தன்னை வன்பு ணர்வு செய்ததாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் அவுஸ்திரேலியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசாரணையின் போதே குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டில் அவருடன் தகாத உறவில் ஈடுபட்டவேளையில் தனுஷ்க குணதிலக ஆணுறையை பெண்ணின் விருப்பம் இல்லாமல் அகற்றினார் என்பதே முக்கிய குற்றச்சாட்டாக காணப்படுகின்றது.

எனினும் குறிப்பிட்ட பெண்ணின் விருப்பத்துக் மாறாக தகாத உறவில் ஈடுபடவில்லை என தனுஷ்க குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இருவரும் ஓபேரா மதுபானசாலையில் முதலில் சந்தித்ததாகவும் அங்கு இருவரும் நெருக்கமாக இருக்கும் காட்சிகள் சிசிரிவியில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மது அருந்திய பின்னர் இருவரும் அந்த பெண்ணின் வீட்டுக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் இடம்பெற்று சில நாட்களில் மோசமாக ஏதோ நடந்தது என அந்த பெண் தனது நண்பிக்கு குறுஞ்செய்தி அனுப்பினார் என அரச சட்டத்தரணியொருவர் தெரிவித்துள்ளார்.

நான் அனைத்து பிழைகளையும் செய்தேன் என நீங்கள் தெரிவிக்கக்கூடும். நான் சந்தித்த வேளை தனுஷ்க குணதிலக்க மிகவும் அழகானவராகக் காணப்பட்டார். ஆனால் நாங்கள் தகாத உறவுகொள்ள ஆரம்பித்தவேளை திடீரென அவர் ஏதோ மாற்றமடைந்தவராக காணப் பட்டார்.மிகவும் வன்முறைக் குணம் கொண்டவராகக் காணப்பட்டார் என அந்த பெண் குறிப்பிட்ட குறுஞ்செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேபோன்ற குறுஞ்செய்தியை தனது மற்றுமொரு நண்பருக்கும் அந்த பெண் அனுப்பியுள்ளார் என்ற தகவல் நீதிமன்றத்தில் வெளியாகியுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட பெண் கருத்துத் தெரிவிக்கையில், தனுஷ்க குணதிலக எனது கழுத்தை நெரித்த வேளை நான் எனது உயிருக்கு ஆபத்து என அஞ்சினேன்.

அவரின் செயற்பாடு சில சந்தர்ப்பங்களில் என்னால் மூச்சுவிடக்கூடமுடியவில்லை. படுக்கை அறைக்கு சென்றவுடன் அவர் ஒரு வித்தியாசமான மனிதராக மிருகமாக மாறினார்.அவருடன் இருந்த போது மூன்று தடவைகள் தமக்கு மூச்சுத் திணறல் மற்றும் மரண பீதி ஏற்பட்டது. நான் வேதனைப்பட்டதைப் பார்த்து தனுஷ்க குணதிலக்க சிரித்துக் கொண்டிருந்ததை நான் அவதானித்தேன் என ஒடின்டா நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

### இந்திய மீனவர்கள்

தலைமையில் நேற்று புதன்கிழமை(20) மதியம் ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் தொடர் அத்து மீறிய நடவடிக்கையினால் இலங்கை மீனவர்கள் குறிப்பாக வடக்கு மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எமது மீனவர்களின் பல இலட்சம் ரூபாய் மீன் பிடி வலைகளை கடலில் வைத்து சேதப்படுத்தி சென்றுள்ளனர்.

இதனால் மீனவர்கள் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.இந்திய மீனவர்கள் தற்போது மன்னார் கடற்பரப்புக்குள் வந்து மீன் பிடித்துச் செல்கின்றனர்.

இதனால் மன்னார் மீனவர்கள் வெறும் கையுடன் கரை திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் பெண் மீனவத் தொழிலாளர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மீனவர்களுக்கு மீன் பாடு குறைந்தால் பெண் தலைமைத்துவ மீனவக் குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன.

குறிப்பாக பெண் தலைமைத்துவ மீனவக் குடும்பப் பெண்கள் கறுவாட்டுக்கு மீன் வெட்டுதல்,வலையில் இருந்து மீன்களை அகற்றுதல் உள்ளிட்ட வேலைகள் செய்து வருகின்றனர்.

இதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை வைத்து தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது கடலில் விடும் வலைகள் இந்திய மீனவர்களின் டோலர் படகுகளால் சேதமாக்கப்படுகின்றமை மற்றும் மீன் பாடு இல்லாத காரணங்களால் அவர்கள் தமது வேலை வாய்ப்பை இழக்கின்றனர்.

இலங்கை கடல் பரப்புக்குள் இந்திய மீனவர்கள் நுழைந்து மீன் பிடித்துச் செல்லும் வரை கடற்படை கடலில் கிடந்து என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை.

எனவே இவ்விடத்தில் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்னார் மாவட்ட மீனவர்கள் உள்ளடங்களாக வடக்கு மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களினால் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

### திலீபனின் நினைவேந்தல்...

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (20) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

திலீபனின் நினைவேந்தல் தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக திலீபன் இருந்தாலும் அவர் அஹிம்சை வழியில் போராடி இறுதியில் உயிர்த் தியாகம் செய்தார்.

திலீபனின் நினைவேந்தல் தற்போது பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. திலீபனின் உருவப்படத்தை சுமந்த வண்ணம் ஊர்தி பவனி மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் செல்லும் போது தம்பலகாமம் பகுதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான சிங்களவர்கள் தம்பலகாமம் பகுதியில் வாழ்கிறார்கள். சிங்களவர்கள் அதிகளவில் வாழும் பகுதிக்குச் செல்லாமல் இந்த ஊர்தி பேரணி திருகோணமலைக்குச் சென்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செல்லாமல் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் சிங்களவர்களின் கோபத்தைத் தூண்டி விடும் வகையில் இந்த பவனி சென்றுள்ளது.

நான் சிங்களவர்களுக்கு ஆதரவாகவும் தமிழர்களுக்கு எதிராகவும் உரையாற்றவில்லை. திலீபனின் நினைவு ஊர்தி பவனிக்கு நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளன. இந்த பவனியால் தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் நிலை காணப்படுகிறது.அனுமதி பெறாத ஒரு பவனிக்கு பொலிஸார் எவ்வாறு அனுமதி வழங்கினார்கள் என்பது பிரச்சினைக்குரியதாகவுள்ளது. ஆகவே இப்பிரச்சினைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும். திலீபனின் நினைவேந்தல் பவனி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்க வேண்டும்.

இதன்போது எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை அறிவிக்குமாறு வலியுறுத்துகிறேன் என்றார்.

## ஜனாதிபதி ரணில் - நேபாள பிரதமர் சந்திப்பு





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹாலுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தொடருக்கு இணையாக நேற்று (20) நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால அரசியல், பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து இதன்போது இரு நாட்டுத் தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள இலங்கை - நேபாள கூட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வு, அதற்கான மிக முக்கியமான நடவடிக்கையாக அமையும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் எதிர்காலத்தில் வலுவாக முன்னேறும் என நம்பிக்கை தெரிவித்த நேபாள பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நேபாள மக்களுக்கு இடையில் சமய மற்றும் கலாசார ரீதியில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுவதாகவும், இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை விரிவுபடுத்துவதற்கு இது ஒரு சிறந்த காரணியாக அமையும் என்பதை இரு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம், தனிமனிதர்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது மற்றும் சுற்றுலாத் துறையில் உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், பலதரப்பு விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் தலைவர்கள் கலந்துரையாடினர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் உட்பட இலங்கை மற்றும் நேபாளத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## எஞ்சியோகிராம் இயந்திரம் பதுளையில் இல்லை: மாரடைப்பால் இதுவரை 770 பேர் உயிரிழப்பு!




பதுளை பொது வைத்தியசாலையில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 883 பிரேத பரிசோதனைகளில் 770 பேர் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எஞ்சியோகிராம் இயந்திரம் இல்லாத காரணத்தினால் தான் இந்த துரதிர்ஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளதாக பதுளை பொது வைத்தியசாலையின் துணைச் செயலாளர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பதுளை மாவட்டம், ஊவா மாகாண போதனா வைத்தியசாலை மற்றும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையிலும் இந்த இயந்திரம் இல்லை.

ஊவா மாகாணத்தில் வசிக்கும் 1.5 மில்லியன் மக்கள் இந்த இயந்திரத்தின் மூலம் தங்களுக்குத் தேவையான சேவைகளைப் பெற வேண்டுமானால் அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி வைத்தியசாலை, களுத்துறை நாகொட வைத்தியசாலை, கராப்பிட்டிய வைத்தியசாலை, அநுராதபுர வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டும்.

குறித்த வைத்தியசாலை தரவுகளின்படி, கடந்த ஆண்டு மாத்திரம் இருதய சிகிச்சைப் பிரிவுக்கு வருகை தந்த 2ஆயிரத்து 179 பேரில் 750 பேர் எஞ்சியோகிராம் பரிசோதனைக்கு வருகை தந்தவர்களாவர்.

பதுளையில் மாத்திரம் கடந்த வருடம் மாகாண பொது வைத்தியசாலையில் ஆயிரத்து 887 பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 770 பேர் இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள்.

குறித்த வைத்தியசாலையில் இறந்தவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு, கிட்டத்தட்ட 40 வீதமானோர் இதய நோய் காரணமாக உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார். நாளாந்தம் சுமார் 170 இதய நோயாளிகள் பதிவாகுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கடலுக்குள் ஏற்பட்ட வெடிப்புகள் தொடர்பில் ஆராயுமாறு வனஜீவராசிகள் திணைக்களம் பணிப்பு

ஆமைகளின் உயிரிழப்புக்கு காரணமாக அமைந்த கடலுக்குள் ஏற்பட்ட வெடிப்புகள் தொடர்பில் ஆராயுமாறு, விடயத்துக்கு பொறுப்பான தரப்பினருக்கு அறிவித்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாரா நிறுவனம், கடற் றொழில் திணைக்களம், கரையோரப் பாதுகாப்பு திணைக் களம் மற்றும் இலங்கை கடற்படை யினருக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் கரை யொதுங்கிய ஆமைகளின் உடல்களில் மேற் கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளில், அவற்றில் பெரும்பாலானவை கடலில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாகவே உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையான டைனமைட் எனப்படும் வெடிமருந்துகளை பயன்படுத்தியதன் காரணமாக கடலில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், நாட்டின் மேற்கு கடற்பரப்பில் இவ்வாறான மீன்பிடி முறைகளின் பயன்பாடு குறைவாகவே காணப்படுவதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வெடிப்புகள் தொடர்பான நிச்சயமான தகவல்களை வெளிப்படுத்துவதன் மூலம் ஆமைகள் மட்டுமன்றி ஏனைய கடல் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பையும் உறுதிப் படுத்துவது முக்கியமானது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் ஒரு மாத காலப்பகுதிக்குள், நாட்டின் மேற்கு, தெற்கு மற்றும் வடமேற்கு கடற்கரைகளில் சுமார் 40 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கின.

யாழ்.நெடுந்தீவு கடற்கரையிலும் உயிரிழந்த 2 ஆமைகள் கரையொதுங்கியதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இலங்கை வந்தார் நடிகை ஆண்ட்ரியா





தென்னிந்திய திரைப்பட நடிகை ஆண்ட்ரியா ஜெரேமியா, படப்பிடிப்புக்காக இலங்கை வந்துள்ளார். இருவர் அடங்கிய குழுவினர்கள் நேற்று (20) காலை யாழ்ப்பாணம் மாவட்ட நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு விஜயம் செய்து பூஜை வழிபாட்டிலும் கலந்துகொண்டார்.

பின்னர், தென்னிந்திய திரைப்பட நடிகை ஆண்ட்ரியா ஜெரேமியா தனது டுவிட்டர் பக்கத்தில் யாழ். மாவட்டத்தின் வருகை பற்றி பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 9ஆவது உலர் வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு கிளிநொச்சி வளாகத்தில்






பு.கஜிந்தன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் "நவீன உலகத்தில் உணவு நெருக்கடியைத் தவிர்த்தல்" என்ற தொனிப்பொருளில் 9ஆவது உலர் வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்றது.

விவசாய பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வு, யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி எஸ்.வசந்தரூபா தலைமை யில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.கண்ணதாசன் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக விவசாய திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மாலதி பரசுராமன் கலந்து கொண்டிருந்ததுடன், முதன்மை பேச்சாளராக ஜப்பான் நகோயா (NAGOYA) பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கொய்சி உசாமி (KOISHI USAMI) கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், விவசாயத் திணைக்களங்களின் உயரதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரத அறப்போராட்டத்தின் ஆறாம் நாள் நினைவேந்தல் நேற்று (20) பல்கலைக்கழக பிரதான வளாக பொதுத் தூபியில் மாணவர்களால் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

படங்கள்: பு.கஜிந்தன்

## மஹிந்த யாப்பா அபேவர்தன பங்களாதேஷ் சபாநாயகர் சந்திப்பு





உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள பங்களாதேஷ் சபாநாயகர் கலாநிதி ஷிரின் ஷர்மின் சவுத்ரி (Shirin Sharmin Chaudhury) மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் இடையில் சந்திப்பொன்று அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் மொஹமட் அரிஃபுல் இஸ்லாம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை குறுகிய காலத்தில் சமாளித்தமை தொடர்பில் பங்களாதேஷ் சபாநாயகர் கலாநிதி ஷிரின் ஷர்மின் சவுத்ரி இதன்போது பாராட்டுகளைத் தெரிவித்தார். மேலும், 2024ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெறவுள்ள பங்களாதேஷ் பாராளுமன்றத் தேர்தலை அடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள்புதுப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறும் பங்களாதேஷ் சபாநாயகர் இதன்போது அழைப்பு விடுத்தார். அதற்கு மேலதிகமாக, இரு நாடுகளினதும் பாராளுமன்ற முறைமை, சுகாதாரச் சேவை, கைத்தொழில்துறை, சுற்றுலாத் துறை, முதலீடு மற்றும் ஏற்றுமதி போன்ற விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினரிடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பையடுத்து, பங்களாதேஷ் சபாநாயகர் ஷிரின் ஷர்மின் சவுத்ரி பாராளுமன்றத்தின் விசேட விருந்தினருக் கான குறிப்புப் புத்தகத்திலும் கையொப்பமிட்டார்.

## லொறி – முச்சக்கரவண்டி மோதி விபத்து

எம்.ஏ.எம்.ஹசனார்

பால் ஏற்றிச்சென்ற லொறி, முச்சக்கரவண்டியுடன் மோதியதில் ஒருவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிமடையிலிருந்து கெப்பெட்டிப்பொல நோக்கி பால் ஏற்றிச்சென்ற லொறியின் எதிர்த்திசையில் வந்த முச்சக்கரவண்டி ஒன்று கெப்பெட்டிப்பொல முச்சந்தியில்வைத்து லொறியை முந்திச்செல்ல முற்பட்டபோதே நேற்று (20) இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், முச்சக்கரவண்டி சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார். அதனை தொடர்ந்து பிரதேச மக்கள் அவரை மீட்டு வெலிமடை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

விபத்து குறித்து கெப்பெட்டிப்பொல வீதி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


**மோட்டார்சைக்கிள் சந்தை – அநுராதபுரம்**

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BEU 38xx | BAJAJ | PULSAR 150 NS |
| NC BFO 88xx | BAJAJ | PULSAR 150 UG |
| NC BFP 68xx | BAJAJ | PLATINA |
| NW BEP 76xx | BAJAJ | PULSAR 150 |
| NC BCM 69xx | BAJAJ | PULSAR 150 |
| CP BEQ 34xx | BAJAJ | PULSAR 150 NS |
| NW BGV 93xx | BAJAJ | PULSAR 150 |
| NC BBF 56xx | BAJAJ | DISCOVER 125 |
| NC BFI 55xx | BAJAJ | PULSAR 150 |
| NC BIQ 06xx | HONDA | DIO SCV 110 |
| NC BDE 48xx | HONDA | DIO SCV 110 |
| NC BEG 96xx | HONDA | DIO SCV 110 |
| NC BFA 80xx | HONDA | DIO SCV 110 |
| NC BGV 29xx | HONDA | DIO SCV 110 |
| NC BHV 45xx | HONDA | DIO SCV 110 |
| NW BHV 46xx | HONDA | DIO SCV 110 |
| NW BIM 10xx | HONDA | DIO SCV 110 |
| NW BHR 00xx | HONDA | DIO SCV 110 |
| NW BEG 89xx | HONDA | DIO SCV 110 |
| NC BDX 40xx | HONDA | DIO SCV 110 |
| NC BFD 03xx | HONDA | DIO SCV 110 |
| NW BIF 84xx | HONDA | DIO SCV 110 |
| NC BGJ 48xx | HONDA | DIO SCV 110 |
| NC BHY 32xx | HONDA | GRAZIA APPS |
| NC BIH 13xx | HONDA | DIO SCV 110 |
| NW BCD 26xx | HONDA | DIO SCV 110 |
| NW BDK 30xx | HONDA | DIO SCV 110 |
| NC BIP 49xx | YAMAHA | RAY ZR |
| NC BCC 94xx | YAMAHA | FZ16 |
| NP BIR - 92xx | YAMAHA | RAY ZR |
| NP BGZ 82xx | YAMAHA | RAY ZR |
| NC BAY 33xx | YAMAHA | FZ16 |
| NW BFN 73xx | YAMAHA | RAY ZR |
| NC BID 47xx | TVS | SPORT |
| NP BHK 23xx | TVS | WEGO |
| NP BIY 69xx | TVS | NTORQ |
| NC BFJ 61xx | HERO | PLEASURE |
| NWBEM23xx | DEMARK | DZR 120cc |

இடம்:—இல: 47/49, யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம்.

பார்வையிடும் திகதி:—23.09.2023 (காலை 8.30 முதல்10.30 வரை)

மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி :—23.09.2023 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா :— 0774787096 தரிந்து:—0773147609

**மோட்டார்சைக்கிள் சந்தை – நாரம்மல**

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BIP 90xx | BAJAJ | PULSAR 150 |
| NW BDW-80xx | BAJAJ | CT 100 |
| NW BHS 95xx | BAJAJ | PULSAR 150 |
| NW BCE-21xx | BAJAJ | PLATINA |
| NW BHY-92xx | BAJAJ | CT 100 |
| NW BBH 34xx | BAJAJ | CT 100 |
| NW BIK-38xx | BAJAJ | PULSAR 150 |
| NW BFV-98xx | BAJAJ | CT 100 |
| NW BIV 16xx | BAJAJ | CT 100 |
| NW BGU 49xx | BAJAJ | PULSAR 160 |
| NW BCW-08xx | BAJAJ | PULSAR 150 |
| NW BDI-27xx | BAJAJ | PULSAR 150 |
| NW BDD-18xx | BAJAJ | PULSAR 150 |
| NW BCD-87xx | BAJAJ | CT 100 |
| NW BIL 00xx | BAJAJ | PULSAR 150 |
| NW BFX 37xx | HONDA | DIO |
| NW BFW 23xx | HONDA | DIO |
| NW BHI 55xx | HONDA | DIO |
| NW BCB 57xx | HONDA | DIO |
| NW BHM 59xx | HONDA | DIO |
| NW BFK-64xx | HONDA | DIO |
| NW BGW-46xx | HONDA | DIO |
| NW BHZ 36xx | HONDA | DIO |
| NW BEW 30xx | HONDA | DIO |
| NW BEP 41xx | HONDA | DIO |
| NW BIF 70xx | HONDA | DIO |
| NW BBY-65xx | HONDA | DIO |
| NW BGL-49xx | HONDA | DIO |
| NW BFL-51xx | HONDA | DIO |
| NW BCM-10xx | HONDA | DIO |
| NW BCJ-51xx | HONDA | DIO |
| NWBIJ92xx | HONDA | DIO |
| NW BFQ-53xx | HONDA | DIO |
| CP BIT-10xx | HONDA | DIO |
| NW BHB 87xx | HONDA | DIO |
| NW BFS 10xx | HONDA | DIO |
| NW BFA 49xx | HONDA | DIO |
| NW BDQ 76xx | HONDA | DIO |
| NW BGV-31xx | HONDA | DIO |
| WP BHE 60xx | HONDA | DIO |
| NW BFL-91xx | HONDA | DIO |
| NW BGV 41xx | HONDA | DIO |
| SG BHN-06xx | YAMAHA | RAY-ZR |
| NW BFO-43xx | YAMAHA | RAY-ZR |
| NW BDR 11xx | YAMAHA | FZ-S |
| NW BHM-52xx | YAMAHA | RAY-ZR |
| NW BGS-38xx | YAMAHA | RAY-ZR |
| NP BGZ-01xx | YAMAHA | fZ-S |
| NW BFH 94xx | HERO | PLEASURE |
| NW BDX-02xx | HERO | PLEASURE |
| NW BCP 42xx | TVS | WEGO |
| NW BIH-94xx | TVS | NTORQ |
| NW BIJ-10xx | SUZUKI | BURGMAN |
| NW LF-85xx | TATA | ACE |

இடம்:—இல: 91, குருநாகல் வீதி, நாரம்மல

பார்வையிடும் திகதி:—25.09.2023 (காலை 8.30 முதல்10.30 வரை)

மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:—25.09.2023 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா:—0774787096 பண்டார:— 0710773722

துரித அழைப்பு:—0117308080 வட்ஸ்அப்:—0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 செப்டெம்பர் 21ஆம் திகதி, வியாழக்கிழமை


# கிழக்கு மாகாண ஆளுநர் கவனத்துக்கு...

பொலிஸாரின் அனுமதியை பெறாது சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் திலீபனின் நினைவேந்தல் ஊர்வலத்தை நடத்தியது முற்றிலும் தவறு என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளமை எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் இவ்வாறு நினைவேந்தல் ஊர்வலத்தை முன்னெடுத்து தேவையில்லாத இனக்கலவரத்தை தூண்டுவதற்கு முயற்சிப்பதாகவும் ஆளுநர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இதுபோன்ற ஊர்வலங்கள் சிங்கள மக்கள் வாழும் ஊர்களில் தவிர்க்கப்பட வேண்டும். ஏனைய இனத்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் பொறுப்புடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற சம்பவங்களுக்கு எதிராக பொலிஸார் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

கஜேந்திரகுமார் எம்.பி. தலைமையில் திருகோணமலையில் வந்த திலீபன் நினைவுதின ஊர்வலம் குறித்து இப்படியாக ஊடகர்களிடம் தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண ஆளுநர். ''கிழக்கு ஆளுநர் வேண்டாம்'' என்று ஒரு இலட்சம் கையெழுத்து வேட்டையை பௌத்த பிக்குகள் திருகோணமலையில் மேற்கொண்டுள்ள சூழ்நிலையில், ஆளுநரின் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. பொறுப்புள்ள ஊடகம் என்ற வகையில் சில விடயங்களை ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

திருகோணமலை நிலாவெளி பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருக்கும் பௌத்த விகாரையின் நிர்மாணப் பணிகளால் இனமுறுகல்கள் ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் சமூக ஆர்வலர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடைய கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்து நிர்மாணிக்க இருக்கும் விகாரையின் பணிகள் ஆளுநரின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டன.

நிலாவெளி பெரியகுளம் பகுதியில் வசிக்கும் குடும்பங்களில் 500 இற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களும் 02 சிங்கள குடும்பங்களும் வசித்து வருகின்றன. அங்கு வாழும் தமிழ் மக்கள் இவ்விகாரை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்க இருப்பதை நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில், விகாரை நிர்மாணப்பணி தொடருமாக இருந்தால் இப்பிரதேசத்தில் பாரியதோர் இனமுறுகல் ஏற்படும் என்று அதனை நிறுத்த ஆளுநர் உத்தரவிட்டாரே அந்த உத்தரவுக்கு என்னவானது?

ஆளுநரின் தடையுத்தரவை மீறி திருகோணமலை பெரியகுளம் சந்தியில் பௌத்த கொடிகள் நடப்பட்டு சட்டவிரோத விகாரை கட்டுமானம் பொலிஸாரின் பாதுகாப்புடன் கடந்த 9ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதே, பொலிஸார் ஆளுநரின் உத்தரவை மதித்தார்களா? அல்லது சட்டவிரோதமாக கட்டப்படும் விகாரைக்கு முன்கூட்டியே சட்டப்படி அனுமதி பெறப்பட்டதா?

அப்படியான அனுமதி பெறப்படாமல் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட அந்த விகாரை நிர்மாணம் குறித்து நன்கறிந்த ஆளுநர், அப்படியான நிர்மாணம் சமூகங்களிடையே நல்லிணக்கத்தை குலைக்கும் என்று கருதியல்லவா அதனை நிறுத்தக் கோரியுள்ளார். திலீபன் நினைவுப்பேரணி அதனைவிடவா நல்லிணக்கத்தை சீர்குலைக்கப்போகிறது?

கிழக்கு மாகாண ஆளுநருக்கு தமிழர் போராட்டமும் வரலாறும் தெரியாமல் இருக்கலாம். தெரியாத ஒன்றை தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது ஒன்றும் தவறான விடயமும் அல்ல. ஆனால் விடயங்கள் தெரியாமல் விபரங்கள் புரியாமல் அவர் ஊடகங்களிடம் கருத்துரைப்பது அவருக்குள்ள அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையினையே காட்டுகிறது.

ஈழப்போராட்டத்தில், தமிழர் விடுதலை கோரும் வேட்கையில் திருகோணமலைக்கென ஒரு தனித்துவம் உண்டு. தமிழர் தாயகத்தின் தலைநகராக திருகோணமலை கருதப்பட்டது. தமிழர் ஆயுதப்போராட்டத்தில் திருகோணமலை மண் பெற்றதை விட இழந்தது ஏராளம். அந்த மண்ணில் நினைவேந்தலுக்கு பொலிஸ் அனுமதி பெற்று நடத்தவேண்டும் என்று கூறுவது எந்தவகையில் நியாயமானது? அப்படியே அனுமதி கேட்டாலும் கொடுக்கப்படுமா? அப்படியே வழங்கப்பட்டாலும் நடத்த விடுவார்களா? பொலிஸாரின் தடுப்பையும் மீறி சாதாரண மக்கள் பொல் மற்றும் ஹெல்மெட்களை கொண்டு தாக்கியதை ஆளுநர் கவனிக்கவில்லை போலும்.

இங்கே இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ''திருகோணமலை பெரியகுளத்தில் விகாரை அமைக்கும் பணிகளுக்கு அனுமதி வழங்க கிழக்கு மாகாண ஆளுநர் மறுத்த நிலையில், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஓகஸ்ட் 28இல் நடைபெற்றபோது மாவட்டச் செயலகத்துக்கு வெளியே, பௌத்த மதகுருக்கள் ஒன்றிணைந்து பாரிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பௌத்த மதகுருக்கள், மாவட்டச் செயலகத்துக்குள் நுழைந்து, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை இடைநடுவே தடுத்து, அங்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். முறைப்படி அனுமதி பெற்றா பிக்குகள் உள்ளே வந்தனர்? அப்படி அத்துமீறியவர்கள் மீது சட்டம் பாய்ந்ததா? இதே தமிழர்கள் எவராவது அவ்வாறு உள்ளே வந்திருக்க முடியுமா? அல்லது சட்டப்படி வரத்தான் அனுமதி கிடைத்திருக்குமா?

ஆளுநர் என்பவர் அரசாங்கத்தின் சேவகர். அது அனைவருக்கும் தெரியும். ஆனால் ஜனநாயகத்தின்பால், நீதியின் பேரால் அவர் நியாயத்தின் பக்கம் நிற்கவேண்டிய கடமையும் பொறுப்பும் இருக்கிறது. ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க அவருக்கு கடப்பாடு இருக்கிறது. அதைவிடுத்து சட்டம், ஒழுங்கு என்று பேசுவதன்மூலம் அரச இயந்திரத்தை திருப்திப்படுத்த அவர் முயல்வாரானால் தமிழ்ச் சமூகம் மட்டுமல்ல வரலாறும் அவரை ஒருபோதும் மன்னிக்காது.

## இன்றைய நாளில்...

- 1934 – ஜப்பானில் மேற்கு ஒன்சூ பகுதியில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 3,036 பேர் உயிரிழந்தனர்.
- 1942 – பெரும் இன அழிப்பு: யோம் கிப்பூர் யூத விடுமுறை நாளன்று மேற்கு உக்ரைனில் 2,588 யூதர்கள் நாட்சிகளினால் கொல்லப்பட்டனர்.
- 1949 – மக்கள் சீனக் குடியரசு நிறுவப்பட்டது.
- 1989 – இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர் ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1990 – மட்டக்களப்பு ஆரையம்பதியில் புதுக்குடியிருப்பு கிராமத்தில் 17 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2001 – நாசாவின் டீப் ஸ்பேஸ் 1 விண்கலம் பொரெல்லி வால்வெள்ளிக்குக் கிட்டவாக 2,200 கி.மீ. தூரத்துக்குள் சென்றது.
- 2003 – கலிலியோ விண்கலத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு அது வியாழனின் வளிமண்டலத்தினுள் அனுப்பப்பட்டு அதனுடன் மோதவிடப்பட்டது.
- 2013 – இலங்கையின் வடக்கு மாகாண சபைக்கு முதல் தடவையாகத் தேர்தல் நடைபெற்றது.



# சாந்த நிலத்தின் உணர்வு...

எஸ்.ஜனூஸ்




நாம் நேசித்த நமக்கு நெருக்கமானவர்கள் துரோகம் இழைக்கின்றபோது ஏற்படுகின்ற வலி மிகவும் கொடுமையானது. அந்த ரணத்தை நினைக்கையில் கடும் துயர் ஏற்படும்.

அப்படியொரு ஆறா வடுவினையே சாய்ந்தமருதூருக்கு மு.காவும் அதன் தலைமையும் உறுப்பினர்களும் விதைத்துள்ளனர்.

கல்முனை தொகுதியில் கடந்த பல வருடங்களாக எம்.பியாய் நீடிக்கும் ஹரீஸ் மருதூரின் மருமகன். தலைவர் ஹக்கீம் மருதூரின் பெரும் அரவணைப்புடன் தலைமை மகுடம் சூடியவர். சாய்ந்தமருது மு.காவுக்கு முப்பது வருடங்களுக்கு மேல் பெருத்த ஆதரவு வழங்கிய ஊர்.

இப்படியான சூழலில் சாய்ந்தமருதூருக்கான பல்வேறு ஆணித்தரமான அபிலாஷைகள் தொக்கி நின்றவேளையிலும் மு.கா. சமூக உரிமைக்கான விடுதலை இயக்கம் எனும் எண்ணத்தில் மு.காவை பொறுமை காத்து வளர்த்தெடுத்தது மருதூர் மண்.

மருதூரை மானசீகமாய் வெறுப்பூட்டும் அநியாய அரசியலை முன்னெடுத்த முஸ்லிம் காங்கிரஸ் மீது அம்மக்கள் உடனடியாக தமது அதிருப்தியினை வெளிப்படுத்தவில்லை. 1989 தொடக்கம் 2018 வரை சாய்ந்தமருதில் கோலோச்சிய இயக்கமே முஸ்லிம் காங்கிரஸ்.

அக்காலங்களில் சாய்ந்தமருதில் மு.காவின் அதிகார அரசியல் நிலைபெற்றபோதும் அம்மக்களின் நிலைபேறான எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. அப்போதெல்லாம் தாம் ஏமாற்றப்படுகிறோம் என்பது பற்றி கணிசமான மருதூர் மக்கள் அக்கறைப்படவில்லை.

தாமும் தம் பாடெனவும் வெகு ஜனங்களில் பலர் பொது நோக்கமின்றி இருந்து விட்டனர். அன்றுகளில் சாய்ந்தமருதூரில் சுய இலாப அரசியல் நோக்கில் களம் கண்ட சிலர் தமக்காகவும் தன் குடும்பத்துக்காகவும் மற்றுமான அரசியல் சலுகைகளுக்காகவும் தாய் மண் மீது நிகழ்த்தப்பட்ட அடக்குமுறைகளை கண்டும் காணாமல் இருந்து விட்டனர்.

ஆனாலும், தமது தாய் மண் அடிமைச் சாசனத்தால் ஆளப்படுகிறது என்பதை அன்றைய நாட்களிலும் ஒரு சில ஊர்ப்பற்றாளர்கள் உணர்ந்து போராடி இருக்கின்றனர் என்பதை வரலாறு புடம் போடுகிறது. அவர்களை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

உலக வரலாற்றில் ஒடுக்குமுறைக்கு எதிரான ஜனநாயகப் போராட்டங்கள் பற்றி பலர் அறிந்திருப்பீர்கள். தமது இருப்பியலுக்கு எதிராக நிகழும் அராஜகங்களை சகித்து கொண்டு வாழ்கின்ற அடிமை மனப்பான்மை மிக ஆபத்தானது.

தானும் தன் குடும்பமும் Safe Zone இல் இருந்தால் போதுமானது, மற்ற மனிதர்கள் எப்படி போனாலும் பரவாயில்லை என்கிற சுயநல எண்ணப்பாங்கு அதை விடவும் அபத்தமானது. இங்கே பலர் அப்படித்தான் அம்சமாய் வாழ்ந்திட பழக்கப்பட்டிருந்தனர். அப்படியான மக்கள் கூட்டத்தில் தமக்கு நிகழும் அநீதி குறித்தும் சிந்திக்கவும் ஒரு தரப்பு இருந்தது, இருக்கிறது என்பது ஆறுதலான விடயமே.

முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பாசறை எப்போதுமே தமது சுயநல அரசியல் நகர்வுக்கான வெற்று போராட்டங்களை மாத்திரமே முன்னிலைப்படுத்தி வந்திருக்கிறது. அதன் காரணமாகவே அவர்கள் மருதூரின் நியாயமான உரிமைப் போராட்டத்தினை தொடர்ச்சியாக கொச்சைப்படுத்தி வந்தனர்.

ஒரு கட்டத்தில் அவர்களுக்கு மருதூர் அரசியல் அஜீரணமாக ஆயிற்று. அவர்களிடம் எதிர்க்கேள்வி தொடுத்த மருதூர் மக்களிடம் கசப்பை உமிழ முனைந்தனர். அதனால் அம்மக்களுக்கு கிடைக்கப்பெற்ற பெற தகுமான உரிமை சார் அனுகூலங்களை தடுக்க விளைந்தனர். அபிவிருத்தியில் ஓரம் கட்டப்பட்டனர். மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடத்தப்பட்டனர். இத்தனைக்கும் மேலாக பயங்கரவாதிகளின் மண் என அம்மண்ணை இனவாத சக்திகளிடம் போட்டுக் கொடுத்து அதில் சிற்றின்பம் கண்டனர்.

தாம் அன்பாக அரவணைத்த அரசியல் எட்டப்பர்களின் துரோக முகங்களை நவீன ஊடகங்களின் துணையுடன் துகிலுரித்த மருதூர் சமூகம் வேதனையின் உச்சத்தில் காட்டாறு வெள்ளம் போல் விம்மி வெடித்தது.

இயல்பாய் அரசியல் அறச் சீற்றத்தில் குதித்த மருதூர் போராட்டக் களத்தில் கண்ணுக்கு தெரியாத கொடும் நுண்ணிய வைரஸ் காவிகளும் இல்லாமலில்லை. ஆனாலும், அவர்களையும் ஆழ ஊடுருவிக் கொண்டு ஒரு போராட்டம் தொடர்ந்து வருகிறது. மண்ணின் உரிமை சார் உணர்வுக்காய் இதய சுத்தியுடன் பாடுபடும் உன்னத உள்ளங்கள் உள்ளவரை இப்போராட்டம் தொடரும்.

இருப்பினும், முஸ்லிம் சமூகம் இலங்கையில் பல்வேறு ஆதிக்க முறைகளில் பாதிக்கப்பட்ட சமூகம் என்பதாய் நாம் எல்லோரும் பேசுவோம்.

ஆனால், சொந்த அரசியல் சக்திகளால் பற்பல துன்பியல் சம்பவங்களை எதிர்நோக்கி வருகிற மருதூர் மக்களின்(Victims Group) நியாயங்கள் குறித்து முஸ்லிம் சமுதாயத்தினுள் ஆழமான புரிதல் இல்லை.

மாற்று சமூக அரசியலுக்கு எதிரான வன்முறை கலந்த போராட்ட வடிவங்களை கூட பொதுவெளியிலும் உள்ளூரவும் கொண்டாடி மகிழும் நம்மவர்களில் சிலர் மருதூரின் ஜனநாயகத்தின் அங்கமான தார்மீக போராட்டத்தினை ஏதோ ஒரு வகையில் எள்ளி நகையாட விருப்பு கொண்டுள்ளது வேடிக்கையானது.

கடந்த காலங்களில் தமது சவாலான அரசியல் களங்களை வெற்றி கொள்ள பல்வேறு அக்கிரமங்களை நிகழ்த்தியவர்கள், துடிக்க பதைக்க பலர் உயிர்ப் பலிக்கு காரணமானவர்கள், உரிமைக்கான கோதாவில் இன்னும் பலரை ஊனமாக்கியவர்கள் தான் இன்றுகளில் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டதாய் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

தனிப்பட்ட ரீதியில் ஒரு மனிதனை வன்முறையின் பால் எதிர்கொள்வதிலும் உள்ளங்களை நோவினை செய்வதிலும் அல்லது உருவ பொம்மைகள் எரிப்பதிலும் எனக்கு துளியும் உடன்பாடு இருந்ததில்லை.

இருப்பினும், ஜனநாயக போராட்ட களங்களில் பங்குகொள்கிற அத்தனை மனித உணர்வுகளும் அவர் தம் போராட்ட வடிவங்களும் ஒருமித்ததாய் அமைந்ததில்லை. இத்தனைக்கும் முஸ்லிம் அரசியலில் பொம்மைகள் எரியூட்டுதல் புதிய அணுகுமுறையும் அல்ல.

ஹக்கீம், ஹரீஸ் ஆகிய அரசியல் தலைவர்களின் தனிப்பட்ட ஒரு சில நல்ல பண்புகள் மீது எனக்கு எப்போதும் நல்ல மரியாதை இருக்கிறது. ஆனாலும், அவர்களினால் தொடரப்படும் இரட்டை முக அரசியல் மிகுந்த அபத்தமானதும் ஆபத்தானதுமாகும்.

குறிப்பாக ஹரீஸ் எம்.பி. சாய்ந்தமருதூரின் மருமகன். அந்த மருமகனுக்கு தொடர்ச்சியாக பல வருடங்கள் வாக்களித்து அன்பின் கிரீடங்களை சூட்டியுள்ளது சாய்ந்தமருது.

அதற்கான பிரியத்தின் விசுவாசம் அவரிடம் இருந்து இன்னும் வெளிப்படவில்லை." என் மையத்தின் மேல் தான் உங்களுக்கு சபை என்று எம்மை அந்நியப்படுத்தி எம் அன்பினை கொன்று விட்டார் அவர்.

இப்போது நாங்கள் போராடிக் கொண்டிருப்பது அவரது பிள்ளைகள், உறவுகள், சந்ததிக்கும் சேர்த்து தான் என்பதை அவர் உணர வேண்டும்.

மருதூர் சாந்தத்தின் நிலம். அதில் யாராகினும் அன்பினையும் நம்பிக்கையையும் விதைத்தால் அதை விடவும் பன்மடங்கு அன்பும் அரவணைப்பும் பிரியமும் அறுவடையாகும்.

# ஜனாதிபதி – சமந்தா பவர் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது பொதுச்சபை கூட்டத்தொடருக்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. சபையின் இணைக் காரியாலயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவரை சந்தித்தார்.

இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்தபோது ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய சுருக்கமான விளக்கமளித்த ஜனாதிபதி, அதனை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் எடுத்துரைத்தார்.

மேலும், ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டதன் பின்னரான செயன்முறைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு பயிற்சி பெற்ற பணியாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பிலான சவாலுக்கு முகம்கொடுத்திருப்பதாகவும் அதனால் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளமையின் பலன்களை அடைந்துகொள்ள இன்னும் இரண்டு வருடங்கள் அவசியப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், ஊழலுக்கு எதிரான கொள்கையை அமுல்படுத்துவதற்கு தமது அரசாங்கத்தின் முழு அரச பொறிமுறையும் முழுமையாக உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, இந்த செயற்பாடுகளை விரைவாக நிறைவு செய்வதற்கு தேவையான ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

'அஸ்வெசும' வேலைத்திட்டத்தின் அறிமுகத்தினூடாக நலன்புரித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் இந்த சந்திப்பின்போது ஜனாதிபதியினால் விளக்கமளித்தார்.

இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்கு ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே வேளையில் தேவையான நிபுணத்துவ உதவிகளையும் வழங்கும் என்று சமந்தா பவர் இதன்போது தெரிவித்தார்.

## நக்கல் நமசிவாயம்

திலீபன் நினைவுப்பேரணி நடத்த உரிய அனுமதி எடுக்காதது தவறு என்று கிழக்கு ஆளுநர் சொல்லியிருக்கிறார்..

அனுமதி எடுத்துத்தானாக்கும் தமிழர் வாழ்விடங்களிலசிங்கள குடியேற்றங்கள் நடக்குது...





நாட்டைக் கட்டியெழுப்பும் வண்ணம் மதங்களுக்கிடையே மத நல்லுறவை பேணுதல், சர்வமத அமைப்பினரது பங்களிப்பின் முக்கியத்துவம் அதன் விரிவான திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று வணக்கத்துக்குரிய எல்லே குணவங்ச தேரர், கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அஷ்-ஷெய்க் ஹசன் மௌலானா மற்றும் அருட்தந்தை நிசான்குரே ஆகியோருக்கிடையில் கொழும்பில் அமைந்துள்ள பௌத்த விகாரை ஸ்தானத்தில் இடம்பெற்றது.

# கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை துரத்தியடிப்போம்

## மன்னார் பிரதேசமெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு எதிர்ப்பு

மன்னார் நகர் நிருபர்

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி பவனி வடக்கு கிழக்கில் மக்களின் நினைவேந்தலுக்கு சென்று வருகிறது. அதற்கமைய, ஊர்தி பவனி இவ்வாரம் மன்னாரை நோக்கி வருகை தரவுள்ள நிலையில்



குறித்த நினைவேந்தல் பவனிக்கு இடையூறு விளைவிக்கும் விதமாகவும் ஊர்தி பவனியை குழப்பும் விதமாகவும் மன்னாரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களில் நேற்று (20) அதிகாலை பரவலாக குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்ற பெயரில் மன்னார் பொது மைதானம், மன்னார் சதொச மனித புதைகுழி வளாகம், மன்னார் ரெலிகொம்முக்கு அருகாமை உட்பட சில பகுதிகளில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டிகளில்,

தமிழீழத்துக்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்த் தியாகம் செய்த மாவீரன் திலீபனின் தியாகத்தை விற்கும் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை துரத்துவோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகள் தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரை குறித்த பெயரில் எந்த இயக்கமும் மன்னார் மாவட்டத்தில் செயற்படுவதாக அறியப்படவில்லை எனவும் குறித்த சுவரொட்டிகளை மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் புலனாய்வாளர்களோ அல்லது அரசாங்கத்துடனோ, முப்படையினரோ இணைந்து செயற்படும் பிரிவினரோ ஒட்டியிருக்கலாம் எனவும் இதை அடிப்படையாக வைத்து மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் மன்னார் பொலிஸார் தியாக தீபன் திலீபனின் நினைவஞ்சலிக்கும் ஊர்தி பவனிக்கும் தடை கோரும் வகையிலேயே இவ் சுவரொட்டி நாடகம் இடம்பெறலாம் என மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

# 55 மில்லியன் ரூபா செலவில் சாய்ந்தமருது கடலரிப்பை தடுக்க பாதுகாப்புச் சுவர்

## வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு அமைச்சர் பிரசன்ன அதிகாரிகளுக்கு பணிப்பு



நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது கடலரிப்பை தடுப்பதற்கான பாதுகாப்பு சுவர்களை நிர்மாணிக்கும் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் அதற்காக தற்போது கைவசமிருக்கும் 35 மில்லியன் ரூபாவை பயன்படுத்துமாறும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, தேவையான மிகுதி 20 மில்லியன் ரூபாவை திறைசேரியிடமிருந்து பெற்றுத்தர தான் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி ஆலோசகரும் முன்னாள் அமைச்சருமான நிமால் லான்சா உறுதியளித்துள்ளார்.

சாய்ந்தமருது கடலரிப்பு தொடர்பான கலந்துரையாடலொன்று, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் கொழும்பில் நேற்று (20) இடம்பெற்றது. இதன்போதே இவ்விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்கள மாகாண பொறியியலாளர் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது, சாய்ந்தமருதின் தற்போதைய கடலரிப்பு நிலைமைகளையும் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் குறித்தும் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

கடலரிப்பின் தீவிரம் காரணமாக மீனவர் வாடிகள், பள்ளிவாசல், அரச கட்டடங்கள், சிறுவர் பூங்காக்கள் பாதிக்கப்பட்ட விடயம் தொடர்பில் விளக்கி மீனவர்களின் மீன்பிடி முற்றாக கடலரிப்பால் பாதிக்கப்பட்ட விடயத்தை சபைக்கு முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், கடலரிப்பை தடுக்க வேண்டியதன் அவசர நிலையை அமைச்சருக்கு விளக்கியதுடன் நிந்தவூரில் முன்னெடுக்கப்பட்டது போன்று நிரந்தரமான தீர்வு வழங்கப்பட்டு மீனவர்களுக்கு அவர்களின் தொழிலை சிறப்பாக செய்ய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்றும் மூன்று தடுப்புச் சுவர்களை முதலில் ஆரம்பித்து தொடர்ந்தும் தடுப்புச் சுவர்களை அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இப்பணியை சாய்ந்தமருதில் முன்னெடுக்க 55 மில்லியன் அளவில் செலவாகும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இங்கு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, இந்த விடயத்தை கால தாமதம் செய்யாமல் அவசரமாக ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதுடன், இதனால் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சவால்களையும் விபரித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜமீல், முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், முன்னாள் கல்முனை மாநகர சபை முதல்வர் சிராஸ் மீராசாகிப் ஆகியோர்களும் இந்த பிரச்சினையின் தீர்வுக்கான அவசியம் தொடர்பில் தமது கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

கூட்டத்தின் சகல விடயங்களையும் கேட்டறிந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கைவசமுள்ள 35 மில்லியனை கொண்டு வேலைகளை அவசரமாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளை பணித்தார். மீதி 20 மில்லியனை திறைசேரி மூலம் பெற்றுத்தர தான் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ஆலோசகரும் முன்னாள் அமைச்சருமான நிமால் லான்சா இதன்போது உறுதியளித்துள்ளார்.

இந்த விடயத்தை காலம் தாழ்த்தாமல் அவசரமாக முன்னெடுக்குமாறு மீனவ சங்க நிர்வாகிகள் இதன்போது கேட்டுக்கொண்டுள்ளனர்.

விலைமனு கோராமல் அவசரமாக கடலரிப்பை தடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய அமைச்சின் செயலாளருக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்த விசேட அனுமதி பெறுவது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டதுடன் கல்முனை பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்த தேவையான வரைபடம், மதிப்பீடு தயாரிக்கவும் அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் முன்னெடுத்த இந்த சந்திப்பு ஏற்பாட்டுக்கான வேலைத்திட்டம் மீனவர்களுக்கு வெற்றியளிக்கும் வகையில் உடனடியாக ஆரம்பிக்க கரையோரம் பேணல் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

# ஜனாதிபதி ரணிலின் இல்லத்துக்கு தீ வைத்த விவகாரம்: ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய்க்கு விளக்கமறியல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் பிரத்தியேக இல்லத்துக்கு தீயிட்டு சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரை அடையாள அணிவகுப்புக்குட்படுத்தும் வரையில் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று முன் தினம் (19) உத்தரவிட்டுள்ளார்.

களுத்துறை தெற்கு, ஹீனெட்டியன்கல பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன், அவர் வதிவிட முகவரி உறுதிப்பத்திரங்களை சமர்ப்பிக்குமாறும் அறிவித்து மேலுமொரு பிணை நிபந்தனையும் வழங்கப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி, 05ஆவது ஒழுங்கையிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்கு, கடந்த வருடம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற மே மாதம் 09ஆம் திகதி தீயிட்ட சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் இவர் இருந்ததாக குற்றவியல் விசாரணை திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளின்போது சந்தேக நபரினால் முன்னெடுக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அது தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அவரை அழைத்ததாகவும் அவர் அதன்போது அவரின் குற்றத்தை சுட்டிக்காட்டி கைதுசெய்ய நடவடிக்கை எடுத்ததாகவும் திணைக்களம் மேலும் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்வேறு சாட்சிகள் இருப்பதால் சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்கு முன்னிலைப்படுத்த வேண்டியுள்ளதால் அவரை விளக்கமறியலில் வைக்குமாறும் இதன்போது குற்றவியல் விசாரணை திணைக்களம் நீதிமன்றத்திடம் கோரியுள்ளது.

முன்வைக்கப்பட்ட காரணங்களை கவனத்தில் கொண்டு, அடையாள அணிவகுப்புக்கு முன்னிலைப்படுத்தும்வரை அவரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிரங்கா உள்ளிட்ட 35 பேர் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் நீதிமன்றத்துக்கு சந்தேகநபர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கை - மெட்டா நிறுவனத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது தொடர்பில் பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நியூயோர்க் மெட்டா (Meta) நிறுவனத்தின் உலகளாவிய விவகாரங்களுக்கான தலைவர் சேர். நிக் கிளெக் (Sir Nick Clegg) ஆகியோருக் கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (19) நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இதன்போது, இணையத்தளம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் வெறுப்பு பேச்சுகள் மற்றும் போலிச் செய்திகளை மட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் புதிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

அது தொடர்பில் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள உத்தேச சட்டமூலத்தின் மூலம், பாதிக்கப்பட்ட தரப்பினர் உயர் நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்றக் குழு மீளாய்வின் போதும் இந்த சட்ட மூலம் தொடர்பில் மேலதிக திருத்தங்களை மேற்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்துறை மேம்பாட்டுக்கான இலங்கையின் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க விரிவாக விளக்கமளித்தார்.

செயற்கை நுண்ணறிவு துறையில் இலங்கையும் மெட்டா நிறுவனமும் சாதகமான பங்குதாரர்களாக செயற் படுவது தொடர்பில் ஆராயவும் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் அபிவிருத்திக்காக மெட்டா நிறுவனத்துடன் ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தை உருவாக்கவும் இங்கு பரிந்துரைக்கப்பட்டது.

காலநிலை மாற்றத்தைத் தணிப்பது தொடர்பில் தரவுகளை அடிப்படையாக கொண்ட வேலைத்திட்டங்களை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங் களுக்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தும் அதேவேளை கல்வித்துறை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி இந்நாட்டு செயற்கை நுண்ணறிவு துறையை மேம்படுத்துதல் உள்ளிட்ட இரு விடயங்கள் தொடர்பில் தான் அவதானம் செலுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முதலீட்டுச் சபை தலைவர் தினேஷ் வீரக்கொடி, சர்வதேச அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# பொலன்னறுவை மாவட்டத்தில் முதல் முஸ்லிம் பெண் அதிபர் நியமனம்



நெலும்புர, சுங்காவில் இக்ரா ஆரம்பப் பாடசாலை அதிபராக ஏ.எஸ்.பர்ஸானா வசீர் நியமிக் கப்பட்டுள்ளார்.

குருநாகல், அரக்யால முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் பொலன்னறுவை சுங்காவில் முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பவற்றின் பழைய மாணவியான இவர், பொலன்னறுவை தம்பல அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றியுள்ளார். இவர், பொலன்னறுவை விஜித்த ஆரம்பப் பாடசாலை மற்றும் சுங்காவில் முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பவற்றில் பிரதி அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியான இவர் தனது பட்டப்பின் படிப்பை திறந்த பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்துள்ளார்.

அதிபர் சேவை தரம் மூன்றில் சித்தியடைந்துள்ள இவர், அல்- ஆலிம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரே பொலன்னறுவை மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் பெண் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (20.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 204.0539 | 215.0005 |
| கனேடியன் டொலர் | 235.2038 | 246.8747 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8871 | 45.8330 |
| யூரோ | 338.9876 | 354.6579 |
| ஜப்பான் யென் | 2.1484 | 2.2453 |
| சிங்கப்பூர் டொலர் | 232.2527 | 243.4057 |
| ஸ்ரேலிங் பவுன் | 393.7333 | 410.5549 |
| சுவிஸ் பிராங்க் | 352.0118 | 370.7483 |
| ஐ.அ. டொலர் | 318.6982 | 329.9359 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 860.3293 |
| குவைட் | குவைட் தினார் | 1,049.3587 |
| ஓமான் | ஓமான் றியால் | 841.5475 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.8694 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.3839 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.2113 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.09.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5242
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,119,920.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 8 8 8 0 5 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3484
சீட்டிழுப்பு திகதி 2023.09.19
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,291,021.60
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 31 41 55 79
விசேட எழுத்து J
இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 38921

லக்கி 7
திகதி 19.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0068
வெற்றி இலக்கினம் கும்பம்
L7 இலக்கம் 3 1
வெற்றி இலக்கங்கள் 7 8 2 6 4 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.10,931,872.48

தன நிதானய
தேதி 2023/09/19
சீட்டிழுப்பு இலக்கம் 1272
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,940,018.40
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 01 06 29 64
விஷேசட ஆங்கில எழுத்து Y
Double Chance இலக்கம் 31473

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 551
சீட்டிழுப்பு திகதி 2023-09-19
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,136,540.40
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 26 36 40 46
விசேட இலக்கினம் மீனம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1590
19/09/2023
25905
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.408,217,152.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கங்கள் 14 15 57 71
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00



வட ஆபிரிக்க நாடான லிபியாவில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் நேற்று முன்தினம் (19) இலங்கையில் உள்ள லிபிய தூதரகத்துக்குச் சென்று தனது இரங்கலைத் தெரிவித்தார்.

# மத்திய மலைநாட்டில் பனிமூட்டத்துடன் கூடிய அடை மழை; வாகனச் சாரதிகள் அவதானம்!

## போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை

மஸ்கெலியா நிருபர்

மத்திய மலைநாட்டில் அடை மழையுடன் கடும் பனிமூட்டமும் காணப்படுவதனால் வாகனச் சாரதிகள் மிகவும் அவதானமாகத் தங்களது வாகனங்களைச் செலுத்தவேண்டுமென போக்குவரத்துப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக நிலவிய சீரற்ற வானிலையைத் தொடர்ந்து மத்திய மலைநாட்டில் பல பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழையுடனான வானிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், நேற்று(20) ஒரு சில பிரதேசங்களுக்கு காலை வேளையில் சீரான வானிலை காணப்பட்டதுடன் பகல் வேளையில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

மழையுடன் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் பிட்டவல, கினிகத்தேனை, தியகல, வட்டவளை, ரொசல்ல, ஹட்டன், மஸ்கெலியா நோட்டன் மற்றும் புகையிரத வீதி உள்ளிட்ட பிரதேசங்களிலும் ஹட்டன், நானுஓயா, நுவரெலியா பிரதான வீதியில் குடாகம, கொட்டகலை, சென்கிளையர், தலவாக்கலை, லிந்துலை, சமர்செட், ரதல்ல, ஹட்டன் கினிகத்தேனை உள்ளிட்ட பிரதேசங்களிலும் கடும் பனிமூட்டம் அடிக்கடி காணப்படுவதனால் இந்த வீதிகளில் பயணிக்கும் வாகனச் சாரதிகள் மிகவும் அவதானமாகச் செலுத்துமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பனிமூட்டம் காணப்படும் பிரதேசங்களில் பயணிக்கும் போது தமக்குரிய பக்கத்தில் வாகனத்தின் முகப்பு விளக்குகளை மிளிரச் செய்தவாறு பயணிப்பதன் மூலம் வாகன விபத்துகளை தவிர்த்துக் கொள்ளலாம் என பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பனிமூட்டம் காரணமாக ஹட்டன் - கொழும்பு மற்றும் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதிகள் உள்ளிட்ட பல வீதிகளில் வாகன போக்குவரத்து ஸ்தம்பிதமடைய நேரிடுகிறது.



மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுத் தலைவராக முன்னாள் மத்திய மாகாண சபை பிரதான செயலாளர் காமினி ராஜரத்னம் நேற்றுமுன்தினம் (19) நியமிக்கப்பட்டார். இதற்கான நியமனக்கடிதத்தை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே அவரது கண்டி காரியாலயத்தில் வைத்து கையளித்தார். இவ்வைபவத்தில் மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க, ஆளுநரின் செயலாளர் திருமதி மஞ்சுலா மடஹபொல உட்பட பலர் கலந்து கொண்டனர். (கண்டி நிருபர்)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு வெளிநாட்டு பெண்கள் காயம்

எல்ல பகுதிக்கு சுற்றுலா சென்ற ஸ்லோவேனியா நாட்டைச் சேர்ந்த இரு பெண்கள் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை, எல்ல பகுதிக்கு சுற்றுலா சென்ற ஸ்லோவேனியா நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்கள் (இருவருக்கும் வயது 23) எல்ல புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில்



செல்கையில் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு 1990 அம்பியூலன்ஸ் மூலம் பதுளை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## ஊர்வலம் நடத்த உத்தேசம்

மஸ்கெலியா நிருபர்

இலங்கை சமாதானப் பேரவை நுவரெலியா மாவட்டக் கிளையால் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 09 மணிக்கு ஹட்டன் நகரசபை முன்றலில் இருந்து மல்லியப்பூ சந்திவரை சமாதான பாதை யாத்திரையும் வீதி நாடகமும் இடம்பெறவுள்ளன என நுவரெலியா மாவட்ட இயக்குனர் திருமதி இரேஷா தெரிவித்தார்.

அன்றைய தினம் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து சமாதானப் பேரவை உறுப்பினர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

# கிரிக்கெட் நிச்சயமற்ற ஒரு விளையாட்டு: தோல்விகளே வெற்றிக்கு அடிப்படை

கண்டி நிருபர்

வெற்றிக்கு அடிப்படையாகத் தோல்விகள் அமைவதுண்டு. எனவே, கடந்த ஆசியக் கிண்ணத்தை கோட்டைவிட்டதைப் பயன்படுத்தி அடுத்த உலகக் கிண்ணத்தை வெற்றிகொள்ள முயற்சிக்க வேண்டும் என விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க நேற்று முன்தினம் ((19) விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிரிக்கெட் போன்ற விளையாட்டுகள் நிச்சயமற்ற தன்மை கொண்டவைகளாகும். அதற்கு அதிர்ஷ்டமும் முயற்சியும் கைகொடுப்பதுண்டு. எனவே, இதுபோன்ற விளையாட்டுகளை வைத்து எமது வீரர்கள் அதைரியமடையும் அறிக்கைகள் வெளியிடுவதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. ஏற்பட்ட தவறுகளை கவனத்தில் எடுத்து எதிர்காலத்தில் அதனைச் சீர்செய்து கொள்ள வேண்டும்.

வரலாற்றுக் காலம் முதல் நாம் பல தோல்விகளைச் சந்தித்து அவற்றைப் பின்னர் வெற்றிகளாக்கிய வரலாற்றைக் கண்ட ஓர் இனமாக நாம் உள்ளோம். எமது அறிக்கைகள் சர்வதேச ரீதியில் எமது வீரர்களை கோழைகளாகக் காட்டும்படி ஆக்கிக்கொள்ள வேண்டாம். அடுத்த உலகக்கிண்ணப் போட்டியில் சகல தவறுகளையும் களைந்து - கடந்த கால குறைகளை நீக்கி சாதித்துக் காட்டுவோம் என ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண்டுகொள்ள வேண்டும் என வேண்டிக் கொள்வதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கு இலவச குடை வழங்கிவைப்பு

செ.திவாகரன்

நானுஓயா பீலிவர் ஈஸ்ட் கிறிஸ்தவ ஆலயத்தின் ஊடாக கடந்த 2004ஆம் ஆண்டு முதல் Hope for children எனும் சமூக மேம்பாட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இது இலங்கை முழுவதும் தற்போது ஆறு நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு நானுஓயா, தலவாக்கலை, அம்பேவல , கிழிக்குஞ்சுமலை, உரும்பிராய், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் நடைமுறைப்படுத்துகின்றது. இதில் 1,200 பிள்ளைகள் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதில் ஒரு விசேட அம்சமாக 18ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் நானுஓயா கிளாரண்டன் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச குடை வழங்கும் நிகழ்வு





நானுஓயா கிளாரண்டன் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக பீலிவர் ஈஸ்ட் கிறிஸ்தவ ஆலயத்தின் நானுஓயா பங்கு திருச்சபை திருத்தந்தை மகேஸ்வரன், எச்.எவ்.சீ. தேசிய ஒருங்கிணைப்பாளர் குணாளன், எச்.எவ்.சீ. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தாஸ், ரதல்ல தமிழ் வித்தியாலய அதிபர் விஜயகுமார் மற்றும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பெண் சாதனையாளர் கௌரவிப்பு

''மிஸ் யுனிவர்ஸ் கனடா'' என்ற பிரபல அமைப்பினூடாக பல்தரப்பட்ட திறமைகளைக்கொண்ட பெண் சாதனையாளர்களுக்கு பட்டமளித்து கௌரவப்படுத்தும் நிகழ்வு நாளை 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கனடா டொரன்டோ நகரில் அமைந்துள்ள ஸ்காபுரோ மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இவ் விஜயத்தின்போது கல்வி இராஜாங்க அமைச்சர், கனேடிய நாட்டிலுள்ள பல்வேறு சிவில், சமூக மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளோடு கல்வி மேம்பாட்டுக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளார். ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பவுள்ளார்.

# வவுனியா பல்கலைக்கழகத்தில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி

வவுனியா நிருபர்

வவுனியா பல்கலைக்கழகத்தில் தியாக தீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வு நேற்று (20) இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளிலும் புலம்பெயர் தேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் தியாக தீபன் திலீபன் உண்ணாவிரதம் இருந்த 6ஆம் நாளான நேற்று (20) வவுனியா பல்கலைக்கழகத்தில் அவருடைய திருவுருவப்படம் பொறித்த பதாகை காட்சிப்படுத்தப்பட்டு மலர்த்தூவி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.



# வவுனியாவில் காணாமல்போன சிறுமியின் சடலத்தை மீள ஒப்படைத்தால் 20 இலட்சம் சன்மானம்

## சிறுமியின் உறவினர் கோரிக்கை

வவுனியா நிருபர்

வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் காணாமல்போன சிறுமியின் சடலத்தை மீள ஒப்படைத்தால் 20 இலட்சம் சன்மானம் வழங்கப்படுமென சிறுமியின் அம்மம்மாவான குணரட்னம் ரோகிணி தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் வைத்து நேற்று முன்தினம் (19) ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அத்துடன், இது தொடர்பில் துண்டுப்பிரசுரம் ஒன்றும் அவரால் வெளியிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 25.08.2023ஆம் திகதியன்று



வவுனியா, பாரதிபுரம் பகுதியில் 02 வயதுச் சிறுமி நீர்த்தொட்டியில் தவறி விழுந்து இறந்தார். இறந்த சிறுமியின் உடல் இராசேந்திரங்குளம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இருப்பினும், கடந்த 05.09.2023 அன்று சிறுமியின் உடல் இனந்தெரியாத நபர்களால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உண்மையான தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல் வழங்குபவர்களுக்கு 10 இலட்சம் சன்மானமாக வழங்கப்படும்.

சிறுமியின் சடலத்தை எடுத்தவர்கள் மீள கையளிக்கின்றபோது 20 இலட்சம் சன்மானம் வழங்கப்படும். இதனை தாழ்மையாகக் கேட்கின்றேன். எங்களது பிள்ளையின் அங்கம் வேண்டும் என குறித்த சிறுமியின் அம்மம்மா தெரிவித்துள்ளார்.

சிறுமியின் சடலம் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 076-6091158 அல்லது 075-4986953 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தெரியப்படுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த சிறுமியின் சடலத்தை காணவில்லை என நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னாரில் 300 இலட்சம் பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருள் மீட்பு



மன்னார் நகர் நிருபர்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு இராஜப்பு ஜோசப் விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள பகுதியில் உலகிலேயே மிக விலையுயர்ந்த போதைப்பொருளான கொக்கெய்ன் வகை போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவர் மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து ஒரு கிலோ 12 கிராம் கொக்கெய்ன் வகை போதைப்பொருளும் கடந்த திங்கட்கிழமை (18) மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ்.சந்திரபாலவின் பணிப்புரைக்கமைவாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகே ஆலோசனையின்பேரில் உப பொலிஸ் பரிசோதகர் ஜே.ரி.யூ.ஜயவர்தன தலைமையிலான குழுவினரான குணசிங்க, அசங்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான விமுர்த்தி, திசாநாயக்க, சுகிர்தரன், கருணா சிங்க, அபயகோன், பிரேமரட்ன ஆகிய 09 பேர் அடங்கிய குழுவினர்



மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட நபர் தாழ்வுபாடு பகுதியைச் சேர்ந்த 34 வயதான நபர் என்பதுடன் சந்தேக நபரிடம் மன்னார் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருள் மற்றும் சந்தேக நபரை ஆஜர்படுத்தவுள்ளனர்.

மேற்படி கைப்பற்றப்பட்ட கொக்கெய்னின் தற்போதைய சந்தை மதிப்பு 30 மில்லியனுக்கும் (03 கோடி) அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மிருசுவிலில் அபாயகரமான வெடிபொருட்கள் அடையாளம்



சாவகச்சேரி நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் வடக்கு பகுதியிலுள்ள காணியொன்றிலிருந்து நேற்று முன்தினம் (19) பிற்பகல் அபாயகரமான வெடிபொருட்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த காணியை ஜே.சி.பி. வாகனத்தால் துப்புரவு செய்தபோது பரல் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதன்போது கிளைமோர், மிதிவெடி மற்றும் மோட்டார் ஷெல் ஆகியன அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் குறித்த பரலினுள் மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்படி விடயம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் ஊடாக வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



தென்மராட்சி, நாவற்குழி பிரதேசத்திலுள்ள தேவைப்பாடுடைய கர்ப்பிணிப் பெண்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் அழகேஸ்வரசாமி ஸ்ரீகரனின் ஞாபகார்த்தமாக சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தால் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. (சாவகச்சேரி நிருபர்)

# தனங்கிளப்பு நெற்செய்கையாளர்களுக்கான காலபோக கூட்டமும் உரமானியப் பதிவும்

சாவகச்சேரி நிருபர்

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு நெற்செய்கை விவசாயிகளுக்கான பெரும்போக உரமானியப் பதிவுகள் வியாழக்கிழமை(21) மற்றும் வெள்ளிக்கிழமை(22) ஆகிய இரு தினங்கள் தனங்கிளப்பு பொதுநோக்கு மண்டபத்தில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன.

கமக்கார அமைப்புக்குட்பட்ட அனைத்து நெற்செய்கை விவசாயிகளும் பதிவுகளை மேற்கொள்வதற்காக தேசிய அடையாள அட்டை, பாவனையிலுள்ள தொலைபேசி இலக்கம், 2023ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரிச் சிட்டை, வங்கிப் புத்தகம், விவசாய சம்மேளனம் - 2023 ஆண்டுக்கான சந்தா ஆகியவற்றுடன் வருகை தரவேண்டும்.

அத்துடன், வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் காலபோகக் கூட்டத்திலும் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் எனவும் கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

# இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அஹ்மத் சாதிக் நியூசிலாந்து உயர்ஸ்தானிகருக்கு இடையில் சந்திப்பு



இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் சாதிக், நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் மைக்கல் எப்பலெடனை (Michael Appleton) நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயத்தில் வைத்து அண்மையில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது இவர்கள் இலங்கையின் தற்போதைய நிலைமைகள், இளைஞர்கள் முகம் கொடுக்கும் சிரமங்கள், வெளிநாடுகளில் உள்ள வாய்ப்புகள், குறிப்பாக உயர்கல்வி மற்றும் விளையாட்டுத்துறை குறித்து கலந்துரையாடினர்.

உயர்ஸ்தானிகர் கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் மையப் பணியுடன், அவர்கள் தற்போது இலங்கையில் சில திட்டங்களை முன்வைத்துள்ளனர். மேலும், உயர்கல்வியைத் தொடர நியூசிலாந்தில் புலமைப்பரிசில் வாய்ப்புகளைப் பற்றியும் கூறினார்.

மேலும், இளைஞர் பாராளுமன்ற வெளி விவகார பிரதியமைச்சர் அஹ்மத் சாதிக், இலங்கையில் உள்ள இளைஞர்களை மேம்படுத்தும் நோக்கில், பல்வேறு உயர்ஸ்தானி கராலயங்களின் ஒத்துழைப்புடன், சில சிறந்த திட்டங்களை செயல்படுத்தியமை தொடர்பாக அவரிடம் பகிர்ந்துக் கொண்டார். அத்தோடு, இலங்கை இளைஞர் பாராளுமன்றம் பற்றிய அறிமுகத்தையும் அவரிடம் பகிர்ந்து கொண்டார்.

இறுதியாக, எதிர்காலத்தில் இலங்கையில் இளைஞர்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார். இளைஞர்களை மேம்படுத் துவதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த முடியும் என்றும் மேலும் எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கை கடனை குறுகிய காலத்துக்குள் மீளச் செலுத்திவிடும் என எதிர்பார்க்கவில்லை

## ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பின்போது பங்களாதேஷ் பிரதமர் தெரிவிப்பு





பங்களாதேஷிடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்ட கடனை குறுகிய காலத்துக்குள் மீளச் செலுத்திவிடும் என எதிர்பார்க்கவில்லை என பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் (19) நியூயோர்க்கில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசிய பிராந்தியத்தின் நாடுகளாக, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் இரு நாட்டு தலைவர்களும் விரிவாக கலந்துரையாடினர்.

மேலும், கடந்த காலத்தில் பங்களாதேஷிட மிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட கடனை குறுகிய காலத்துக்குள் மீளச் செலுத்திவிடும் என எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்த பங்களாதேஷ் பிரதமர், அந்தக் கடனை செலுத்த முடிந்துள்ளதன் ஊடாக இலங்கை பொருளாதார ரீதியில் அடைந்துள்ள முன்னேற்றம் தெரிகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அதனை தொடர்ச்சியாக தக்கவைத்துக்கொள்வதன் ஊடாக இலங்கை சுமுகமான நிலைமையை அடைந்துகொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

கடந்த சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு பங்களாதேஷ் வழங்கிய அசைக்க முடியாத ஆதரவுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் பங்களாதேஷ் மக்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதன்போது, பங்களாதேஷிடம் இருந்து இலங்கைக்கு தொடர்ச்சியாக கிடைத்து வரும் ஆதரவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, பங்களாதேஷின் பெருந்தன்மைக்கு தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தார்.

முன்னதாக பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த சந்தர்ப்பத்தை இழந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இந்த வருட இறுதிக்குள் பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

# "புதியதோர் இலங்கைக்கான தொலைநோக்குப் பார்வை"

## நூல் வெளியீடு




பெக்டம் சிந்தனைக் கொத்து நிறுவனத்தினால் "புதியதோர் இலங்கைக்கான தொலைநோக்குப் பார்வை" என்னும் பெயரிலான வெளியுறவு அணுகுமுறை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் (19) கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் நடைபெற்றது.

இதன்போது, நூலின் எழுத்தாளரான உதித தேவப்பிரியவினால் நூலின் பிரதி, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

பெக்டம் நிறுவனத்தின் பணிப்பாளரும் ஆலோசகருமான கலாநிதி ரங்க கலன்சூரிய, நாட்டின் ஒன்பது மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் நடத்தப்பட்ட ஆலோசனை செயலமர்வுகள் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான நேர்காணலின் தகவல்களை அடிப்படையாக கொண்டு நூல் எழுதப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இராஜதந்திர சேவை உறுப்பினர்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஓய்வுபெற்ற செயலாளர்கள், தூதுவர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள், முப்படை உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் நிர்வாக சேவை அதிகாரிகளுடன் எழுத்தாளர் கலந்துகொண்ட நேர்காணல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

இந்த வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய சகலரும் 30 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் என்பது சிறப்பம்சமாகும். அவர்கள் இலங்கையின் 09 மாகாணங்களையும் உள்வாங்கும் வகையிலான கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டிஜிட்டல் மயமான நாடு என்ற நோக்கத்துக்கிணங்கிச் செயற்படுவோர் எனவும் ரங்க கலன்சூரிய சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வெளிவிவகார கொள்கைக்கு இணையான கலந்துரையாடலின் முக்கியமான மைல்கல்லை அடையாளப்படுத்தும் வகையில் நாட்டின் எதிர்காலத்துக்கான மூலோபாய மார்க்கம் வடிவமைக்கப்பட்டுள்ளதை இந்த நூல் உறுதிப்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வெளிநாட்டலுவல்கள் பதில் அமைச்சர் தாரக பாலசூரிய, முன்னாள் அமைச்சர்களான சரத் அமுனுகம, ரவி கருணாநாயக்க, ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் (சர்வதேச ஊடகங்கள்) செனுகா செனவிரத்ன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# எஹலியகொடை அல்-அக்ஸா கல்லூரியில் ஊடகக் கழகம் அங்குரார்ப்பணம்





எம்.எல்.எஸ்.முஹம்மத்

எஹலியகொடை அல்-அக்ஸா கல்லூரியின் முதலாவது, பாடசாலை ஊடகக் கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

"ஆரோக்கியமான ஊடகக் கலாசாரத்தை நோக்கி அல்- அக்ஸா மாணவர்கள்" என்ற தொனிப் பொருளின் கீழ் ஆரம்பிக்கப் பட்டுள்ள அல்-அக்ஸா கல்லூரி யின் ஊடகக் கழகத்தின் மேற்படி அங்குரார்ப்பண நிகழ்வு கல்லூரி அதிபர் எப்.எம்.காஸிமின் தலைமை யில் அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் என்.எம்.எம்.மிப்லி பிரதம அதிதியாகவும் பிரபல தொழிலதிபர் எம்.எஸ்.எம்.நுஸ்கி கௌரவ அதிதியாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் தயாரிப்பாளர் இஸ்பஹான் சாப்தீன் சிறப்பு வளவாளராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது அல்-அக்ஸா ஊடகக் கழகத்தினால் 2023/24 ஆம் கல்வி ஆண்டில் முன்னெடுக் கப்படவுள்ள 07 முக்கிய செயற் றிட்டங்களுக்குரிய பிரதம அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் மற்றும் ஊடகக் கழக செயற்குழு உறுப் பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஆகியன ஊடகக் கழக மாணவர்களுக்கு அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.



புதிய அலை கலை வட்டம் நடத்திய எவோட்ஸ் 2022, சர்வதேச கவிதைப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றுக் கொண்ட நெதர்லாந்தைச் சேர்ந்த கவிஞர் பசுவூர்கோபிக்கு விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு, புதிய நகர சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமரினால் இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் புதிய அலை கலை வட்ட ஸ்தாபகர் ராதா மேத்தா, தலைவர் ஷண்மு, பொருளாளர் ஓவியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# நிவாரணம் - மனிதநேய உதவிகளுக்கான மன்னர் சல்மான் சேவை மையம்



مركز الملك سلمان
للإغاثة والأعمال الإنسانية
KING SALMAN
HUMANITARIAN AID & RELIEF CENTRE



உலகின் நாலா திக்கிலும் வாழும் சர்வதேச சமூகத்துக்கான சவூதி அரேபியாவின் மனிதாபிமான மற்றும் முன்னோடிகரமான சேவைகளின் ஒரு மைல்கல்லாக நிவாரணம் மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான மன்னர் சல்மான் அறக்கட்டளையை சவூதி அரசு நிறுவியுள்ளது.

மனித சமூகத்தை விட்டும் அவலங்களும் துயரங்களும் துடைக்கப்பட்டு ஒவ்வொரு மனிதனும் கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கு இப்பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிவாரணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சர்வதேச மையமாக இருக்க வேண்டும் என்பதற்காக அதன் பணிகள் 2015 மே மாதம், இரண்டு புனிதஸ்தலங்களின் சேவகர், மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் தாராளமான வழிகாட்டுதல் மற்றும் பராமரிப்பின் கீழ், அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

உன்னதமான மனிதாபிமான இலக்குகளின் அடியாக முளைவிடும் அத்திபாரங்களில் மன்னர் சல்மான் மையம் தனது சேவைகளை கட்டியெழுப்பியுள்ளது.

இது உலகில் எப்பகுதியிலும் பாதிக்கப்பட் டவர்களுக்கு நிவாரணம், தேவையுள்ளவர்களுக்கு உதவி வழங்குதல் ஆகியவை துல்லியமான கண்காணிப்பு பொறிமுறை மற்றும் மேம்பட்ட விரைவான போக்குவரத்து முறைகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

பயனடையும் நாடுகளில் உயர் நம்பகத்தன்மை கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களின் உதவியுடன் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

மன்னர் சல்மான் மையம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நற்பணித் திட்டங்களில் அதற்குத்தகுதி பெற்றவர்கள் மற்றும் அவர்களது சூழ்நிலை பல்வகைமை கவனத்தில் கொள்ளப்படுகிறது. இவ்வுதவிகள் மனிதாபிமான மற்றும் நிவாரண சேவையின் பல்வேறு மட்டங்களையும் உள்ளடக்குகிறது. (நிவாரணப் பாதுகாப்பு, முகாம் நிர்வாகம், ஒதுங்குதல், விரைவாக குணமடைதல், பாதுகாப்பு, கல்வி, தண்ணீர், சூழல் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம், அனர்த்தங்களின்போது தொடர்பாடல்)

கிங் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் பல அடித்தளங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்தத் துறையில் உலகளாவிய முன்மாதிரியாக இருக்க முயல்கிறது.



அவற்றுள் சில:

★உலகளாவிய ரீதியில் தேவைப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட நாட்டின் வழிமுறையை தொடர்ந்தும் பேணல்

★மனிதாபிமானமற்ற எந்த நோக்கமும் இல்லாமல் உதவி வழங்குதல்

★நம்பகமான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு மற்றும் ஆலோசனை

★நிவாரணத் திட்டங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து சர்வதேச அளவுகோல்களையும் பயன்படுத்துதல்

★நாட்டில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் முயற்சிகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்

★மையத்தின் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் நிபுணத்துவம் மற்றும் செயல்திறன்

★உதவி தகுதியானவர்களைச் சென்றடைவதையும் மற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் உறுதி செய்தல்




★வழங்கப்படும் உதவியின் தரம் மற்றும் நம்பகத்தன்மை

**கண் பார்வை மருத்துவ முகாம்கள்**

இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மனிதநேய மற்றும் நிவாரண உதவிகளுக்கான அறக்கட்டளையின் ஏற்பாட்டில் ஹம்பாந்தோட்டை மற்றும் காத்தான்குடி நகரங்களில் இலவச கண் சத்திரசிகிச்சை முகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்போது கண் தொடர்பான நோய்களைக் கண்டறிதல், வெண்படலம் அகற்றுதல் என்பவற்றோடு அறுவை சிகிச்சை செய்தல் மற்றும் கண்ணீர் குழாய் பிரச்சினைகளுக்கான சிகிச்சைகள் போன்றனவும் அறுவை சிகிச்சைகளும் நோயாளிகளுக்கு மருந்துகள், கண்ணாடிகள் மற்றும் லென்ஸ்கள் ஆகியவையும் வழங்கப்பட்டன. தேவையானோருக்கு மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

அண்மைய மருத்துவ முகாம்களினூடாக காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் 4,500 பேருக்கு மேல் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 1,000 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும் 420 பேருக்கு சத்திர சிகிச்சைகளும் என்று பலதரப்பட்ட சேவைகள் முன்னெடுக்கப்பட்டதாக இலங்கைக்கான சவூதி தூதுவராலயம் தெரிவித்தது.

சவூதியின் தமாம் நகரத்தில் இயங்கி வரும் சர்வதேச கண் பார்வை அமைப்பின் அனுசரணையில் இலங்கை மக்கள் எதிர்நோக்கும் கண் பார்வைக் குறைபாட்டு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மருத்துவ முகாம்கள் நடத்தப் படுகின்றன.

பயிற்றுவிக்கப்பட்ட வைத்தியர் குழாம் மூலம் அதி நவீன கருவிகளைக் கொண்டு தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இச் சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2023 செப்டெம்பர் 06 முதல் 16 வரையான காலப்பகுதியில் தென்னிலங்கையில் வலஸ்முல்ல, கிழக்கில் காத்தான்குடி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட இத்திட்டத்தில் இன, மத பேதமின்றி ஆயிரக்கணக்கான நோயாளர்கள் பயனடைந்துள்ளனர்.





**அஷ்ரப் ஆப்தீன் ரியாதி**
**(விரிவுரையாளர்: ஸஹ்வா மகளிர் அரபுக் கல்லூரி)**

# இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த மட்டக்களப்பு பல்கலைக்கழகம் ஹிஸ்புல்லாஹ்விடம் கையளிப்பு





கல்குடா, மீராவோடை செய்தியாளர்கள்

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வந்த மட்டக்களப்பு பல்கலைக்கழகம் நேற்று (20) அதன் தவிசாளரும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்விடம் கையளிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலையடுத்து இராணுவத்தின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழகம் கொரோனா தொற்று சிகிச்சை நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் இராணுவத்தினரால் நேற்று எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம் கையளிக்கப்பட்டது.

இதன் போது மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் ஹிராஸ் ஹிஸ்புல்லாஹ், பொது முகாமையாளர் எஸ்.எம்.தாஹிர், ஹிராஸ் பவுண்டேஷன் அமைப்பின் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.மும்தாஸ் மதனி, அல் - கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஹாறூன் ஸஹவி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# "பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம்" நாவலுக்கு அரச இலக்கிய விருது




சம்மாந்துறை மேலதிக நிருபர்

சம்மாந்துறையைச் சேர்ந்த வைத்தியரும் எழுத்தாளருமான எம்.எம். நௌஷாத் எழுதிய "பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம்" என்ற நாவலுக்கு அரச இலக்கிய விருது -2023 கிடைத்துள்ளது.

கொழும்பு, மருதானை, எல்பின்ஸ்ரன் அரங்கில் கடந்த வாரம் இடம்பெற்ற 66ஆவது அரச இலக்கிய விருது வழங்கும் விழா புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் நடைபெற்றது. இதன்போதே எழுத்தாளர் எம்.எம். நௌஷாத்துக்கு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் மேற்குறித்த விருது வழங்கப்பட்டது.

# அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு செயற்றிறன் தகுதி சான்றிதழ்கள்



அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சிறந்த மூன்று செயற்றிறன் தகுதி சான்றிதழ்களைச் சுவீகரித்துக் கொண்டது.

வெளிநோயாளர், விடுதி மற்றும் இறப்பு கண்காணிப்பு ஆகிய பிரிவுகளுக்கே இந்த செயற்றிறன் தகுதி சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சுகாதார அமைச்சின் தொற்றாநோய்ப் பிரிவின் தேசிய நோய் தடுக்கும் கண்காணிப்பு செயன்முறையின் கீழ் 2022 ஆம் ஆண்டில் மாவட்ட, மாகாண சுகாதார நிறுவனங்களுக்கிடையே நடத்தப்பட்ட தொடர்ந்தேர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தரக்கணிப்பீட்டுக்கிணங்க செயற்றிறனுக்கான தேசிய மதிப்பாய்வு விருது வழங்கும் விழாவின் போது மேற்படி சிறந்த செயற்றிறன் தகுதி சான்றிதழ்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டன.

இச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு நாரஹேன்பிட்டி தேசிய இரத்த மாற்றீடு கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சார்பாக தொற்றாநோய்ப் பிரிவு மற்றும் பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய



அதிகாரி எஸ். அகிலன் கலந்து கொண்டார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாபின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ் பல்வேறுபட்ட விருதுகளையும் சிறப்புச் சான்றிதழ்களையும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பெரியகல்லாறு, களுவாஞ்சிக்குடி பகுதிகளில் கடற்கரை தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம்





கல்லடி செய்தியாளர்

சர்வதேச கரையோரப் பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் வாரத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கடற்கரை தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் பெரியகல்லாறு மற்றும் களுவாஞ்சிக்குடி கிராம சேவகர் பிரிவுகளில் பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்தினத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச மக்களுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடல் சார் சூழல் அதிகார சபை மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு கரையோரங்களை சுத்தம் செய்தனர்.

# தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரியில் நால்வருக்கு விருது



தோப்பூர் செய்தியாளர்

தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரியின் அதிபர் உட்பட நால்வருக்கு குரு பிரதீபா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு திருகோணமலை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு குரு பிரதீபா விருதை வழங்கி கௌரவித்தார்.

இதற்கிணங்க தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.எம்.றஹீம், ஆசிரியர்களான கே.எம்.றிபாஸ், எம்.எம்.ஹிஸாம் மற்றும் எச்.எம்.சுஹைல் ஆகியோர் குரு பிரதீபா விருதைப் பெற்றுக்கொண்டனர்.

தோப்பூர் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுள் அல்-ஹம்றா மத்திய கல்லூரி மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டமை விஷேட அம்சமாகும்.

# நற்பிட்டிமுனை சமுர்த்தி வலய பொறுப்பாளர் ஜெமீல் கௌரவிப்பு



பொலிவேரியன், கல்முனை செய்தியாளர்கள்

கல்முனைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நற்பிட்டிமுனை சமுர்த்தி வலயப் பொறுப்பாளர் எம்.ஜெமீல் 27 வருட கால அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இந்நிலையில், சக உத்தியோகத்தர்கள் ஏற்பாடு செய்த பிரிவுபசார நிகழ்வு நற்பிட்டிமுனை சமுர்த்தி வலய அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (17) இடம்பெற்றது. இதன்போது எம்.ஜெமீல் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி மற்றும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதேவேளை, தன்னுடன் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் உயரதிகாரிகளுக்கும் ஜெமீல் நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ், பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கணக்காளர் எம்.அமீரலி மற்றும் சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் உட்பட சமுர்த்தி முகாமையாளர்கள்,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஜெமீலின் குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்றில் செயலமர்வு



அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் "அதிபர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வு" வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் தலைமையில் அக்கரைப்பற்று முஸ்லிம் மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்று (20) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமாவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இச் செயலமர்வில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில் ஆகிய கல்விக் கோட்டங்களிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

# அஸ்ஸுஹறா வித்தியாலயத்துக்கு நிழல் பிரதி இயந்திரம் அன்பளிப்பு




சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனை அஸ்ஸுஹறா வித்தியாலயத்துக்கு YWMA மற்றும் CSMWA ஆகிய அமைப்புகளின் அனுசரணையுடன் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் நிழல் பிரதி பண்ணல் இயந்திரத்தை அன்பளிப்புச் செய்துள்ளது.

பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர். மஜீதிய்யா விடுத்த வேண்டுகோளை ஏற்று கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இதுதொடர்பான நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (18)இடம்பெற்றது. இந்நிகழ்வில் ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மேற்குறித்த இயந்திரத்தை வழங்கி வைத்தார். இதன்போது கோட்டமட்ட சிறுவர் தடகளப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற தரம்-03 மாணவ - மாணவிகள் மற்றும் தரம்-04 ஆண் மாணவர்களும் ரஹ்மத் மன்சூரினால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பவுண்டேஷன் நிர்வாகிகள், பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆலையடிவேம்பு கோட்டத்தில் அறுவருக்கு குரு பிரதீபா விருது





திருக்கோவில் மேலதிக நிருபர்

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமக்கிருஷ்ணா கல்லூரியைச் சேர்ந்த ஐவருக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் குரு பிரதீபா விருது வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் (19) கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரினால் மேற்படி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமக்கிருஷ்ணா கல்லூரி வரலாற்றில் ஐவருக்கு ஒரே தடவையில் குரு பிரதீபா விருது கிடைத்துள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இதற்கிணங்க சிறந்த தலைமைத்துவத்துக்கான விருது பாடசாலையின் அதிபர் டேவிட் அமிர்தலிங்கத்துக்கும் பிரதி அதிபர் மு.ஜயந்தன் (பாடவிதானம்), பிரதி அதிபர் ஊ.மதியழகன்(நிர்வாகம்), நீரஜா அகிலன்(பாடசாலை ஒழுக்காற்று,சமூகத் தொடர்பு), ஆ.ஜீவிதா (பாடசாலை மாணவர் தலைமைத்துவ திறன் விருத்தி) மேற்படி ஆசிரியர்களுக்கே குறித்த விருது வழங்கப்பட்டுள்ளது .

இதேவேளை, அக்கரைப்பற்று புனித சவேரியார் வித்தியாலயத்தில் சிறந்த அதிபர் சேவை செய்தமைக்கான குரு பிரதீபா விருது அக்கரைப்பற்று பெருநாவலர் வித்தியாலய அதிபர் சி.மணிவண்ணனுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பெரியகல்லாறு, மடத்தடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த சதுர்த்தி அலங்காரத் திருவிழா கடந்த 09 ஆம் திகதி ஆரம்பமாகி 18ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெற்றது. அன்றைய தினம் ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து பாற்குடபவனி இடம்பெற்று மூலமூர்த்திக்கு பாலாபிஷேகம் நடைபெற்றது. யாகத்தைத் தொடர்ந்து பிரதான கும்பம் ஆலயத்தைச் சுற்றி எடுத்துவரப்பட்டு மூலமூர்த்திக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து சத சங்காபிஷேகம் இடம்பெற்றது. தொடர்ந்து மதியம் மகேஸ்வர பூஜையும் நடைபெற்று இரவு சதுர்த்தியை முன்னிட்டு பஞ்சமுக விஷேட அர்ச்சனையும் பக்திபூர்வமாக நடைபெற்றது. படங்கள்:கல்லாறு செய்தியாளர்

# கோமாளித்தனமான அரசியலின் பின்னால் மக்கள் செல்லமாட்டார்கள்

## த. ம. வி. புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பிரசாந்தன்

மட்டக்களப்பு நிருபர்



அரசியல் நோக்கத்துக்காக தம் சமூகத்தையே அழிக்க முற்படும் கோமாளித்தனமான அரசியல் கருத்தியலின் பின்னால் மக்கள் செல்லத் தயாராக இல்லை. பல்வேறு தேவைகளுடன் நாளாந்தம் போராடும் மக்கள் புகலிடக் கோரிக்கை புனைக்கதைகளை புரியாமலில்லை என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.



மண்முனைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களின் வீதி அபிவிருத்திப் பணிகளை இனங்காண்பதற்கான கூட்டம் மண்முனைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(19) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவநேசதுரை சந்திரகாந்தனை எப்போது கைது செய்வார்கள், அவர் பதவி விலக வேண்டும் போன்ற கோமாளித்தனமான அரசியல் கருத்துகளைக் குறிப்பிடும் பொது அமைப்புகள் என தம்மை அடையாளப்படுத்துபவர்கள் சமூகப் பொறுப்புணர்ந்து கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும். மாவட்டத்தில் காணப்படும் வீதி அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அன்று அமைச்சர்களிடம் சென்று காத்திருந்து 05 அல்லது 10 வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு பெற்று வந்த துர்ப்பாக்கிய நிலை மாறி இன்று மிகத் துரிதமாக மக்களின் அத்தியாவசிய போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், மீனவர்கள், பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் மிக முக்கியமான எந்த வீதிகளும் மணல் வீதிகளாக போக்குவரத்துக்கு தடையாக அமையக்கூடாது என்பதில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மிக உறுதியாக உள்ளார். முடிந்தவரை மக்களின் தேவையுணர்ந்து வீதிகளை அமைப்பதிலும் புனரமைப்பதிலும் அதிக நாட்டம் காட்டுகின்றோம். மக்களும் அதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

சமூக மட்ட அமைப்புகள் கிராம, பிரதேச அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டவேண்டும். வீதிகளை தெரிவு செய்யும் போது பொது நோக்கோடு முன்மொழிவுகளை முன்னிலைப்படுத்த வேண்டும். ஆரையம்பதி பிரதான வீதியில் கடந்த ஒரு வருடத்துக்குள் நடந்த வீதி விபத்தில் சுமார் 06 பேருக்குமேல் உயிரிழந்ததாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் அதிக கவனம் செலுத்தியுள்ளார். வீதிச் சமிக்ஞை மின்விளக்குகள் பொருத்துவது தொடர்பான சாத்தியமான அறிக்கை கோரப்பட்டுள்ளது.

பிரதேச சபை, பிரதேச செயலாளர் இணைந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையில் வீதியை முறையற்ற வகையில் கடப்பதைத் தடுப்பதற்கான வீதித் தடைகளை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றார். போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத மதுபாவனை என்பவற்றில் பெற்றோரும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பொது அமைப்புகளின் ஆதரவுடன் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் நமச்சிவாயம் சத்தியானந்தி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மனோரஞ்சிதம் ஜெயச்சந்திரன், வீதி அபிவிருத்தி பொறியியலாளர் மா.குமரேஸ்வரன், கிராம மட்ட பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# மெறூன்ஸ் விளையாட்டுக்கழக சீருடை அறிமுக நிகழ்வு

அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

பாலமுனை மெறூன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கழகத்தின் தலைவர் எம்.ஏ. அபூசாலி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய சீருடையை வீரர்களுக்கு வழங்கி அறிமுகம் செய்து வைத்தார்.



இந்நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் எஸ்.எம்.சபீஸ் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலய அதிபருக்கு விருது

கல்குடா, மீராவோடை செய்தியாளர்கள்



பாடசாலைகளில் தனித்துவமானதும் விஷேடமானதுமான சிறந்த நடைமுறைகளை கடந்த வருடம் 2022 இல் நடைமுறைப்படுத்தி அதனை வெற்றிகரமாக நிறைவு செய்தமையினால் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் சிறந்த அதிபர்களுக்காக வழங்கப்படும் "குருபிரதீபா பிரபா"விருது வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹரீஸுக்கு கிடைத்துள்ளது.

கடந்த கல்வி ஆண்டில் பாடசாலைக்கு வெளியே உள்ள துறைசார்ந்த சமூகப் பிரதிநிதிகளை அழைத்து வந்து வாரத்தில் முதல் நாள் திங்கட்கிழமை காலை ஆராதனையை நடத்தி அதனைப் பயனுள்ள தாக்கி பாடசாலைக்கு கிடைத்த இலாப விளைவுகளை தகுந்த எழுத்துரு ரீதியான சான்றாதாரங்களுடன் காணொளிப் பதிவுகளை சமர்ப்பித்து பாடசாலைக்கான சாதக விளைவுகளை நிரூபித்து காட்டியமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தில் இந்த விருதை இந்த வருடம் பெற்றுக்கொண்ட ஒரே அதிபர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (19) கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கல்வி முகாமைத்துவத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் மைதிலி பாலகுமாரன் முன்னிலையில் இந்த விருதை வழங்கினார்.

# அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மட்டக்களப்புக்கு கடமைசார் விஜயம்



கல்முனை செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பதில் சமுர்த்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்தின் சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் கடமை நிமிர்த்தம் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு அலுவலகத்துக்கு சென்றார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கையும் நடத்தினார். அதனையடுத்து 16 ஆம் திகதி சனிக்கிழமை ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படுகின்ற முயற்சியான்மை பயனாளிகளின் வாழ்வாதார வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவதற்காக கள விஜயம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஆரையம்பதி சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் கே.நவரஞ்சன், கொக்கட்டிச்சோலை சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் எம்.புவிராஜ், ஆரையம்பதி வங்கி வலய உத்தியோகத்தர்கள் ஆகியோரும் சென்றிருந்தனர். இதன்போது முயற்சியாண்மை பயனாளிகளுக்கு பலதரப்பட்ட விளக்கங்களும் தெளிவூட்டல்களும் தொழில்சார் நடத்தைகள் தொடர்பாகவும் கணக்கு வைப்புகள் குறித்தும் தெளிவூட்டினார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானிக்கும் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை சவூதி அரேபிய தூதரகத்தில் இடம்பெற்றது. இதன்போது பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. படம்:மாவடிப்பள்ளி செய்தியாளர்

# தாசிமின் மறைவு கல்விச் சமூகத்துக்கு பேரிழப்பு

## இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் அனுதாபம்

எருவில் செய்தியாளர்

இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் ஆலோசகரும் இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுநிலை அதிகாரியுமான ஏ. எல். எம். தாசிமின் மறைவு கல்விச் சமூகத்துக்கு பேரிழப்பாகும் என இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுநிலை அதிகாரி ஏ. எல்.எம். தாசிமின் மறைவு குறித்து இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் ஸ்தாபகரும் ஊடகப் பேச்சாளருமான க.நடராஜா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



கல்வித் திணைக்களத்தில் சிறாப்பராகப் பதவி வகித்த ஏ. எல். எம். தாசிம் இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து பிரதேச செயலாளராக சம்மாந்துறை, ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களில் பணியாற்றியுள்ளதுடன் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் இருந்து மிகச் சிறப்பாகப் பணியாற்றியவராவார்.

இலங்கை அரசாங்கம் பொதுச் சேவைகள் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரான இவர் இதன் வளர்ச்சிப்படிகளில் ஸ்தாபக உறுப்பினராக இருந்து இதனை தொழிற்சங்கமாக பதிவு செய்வதில் காத்திரமான பங்களிப்புகளை வழங்கியுள்ளார்.

அத்துடன், இச்சங்கத்தின் கணக்குப் பரிசோதகர் மற்றும் ஆலோசகர் ஆகிய பதவிகளை வகித்து இதன் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இவரது மறைவு கல்விச் சமூகத்துக்கு மட்டுமின்றி, ஈழத்து தொழிற்சங்க வரலாற்றிலும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு வீதி நாடகம்



மூதூர் செய்தியாளர்

போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு வீதி நாடகம் தம்பலகாமம், குளக்கோட்டன் வித்தியாலயத்தில் நேற்று புதன்கிழமை (20) இடம்பெற்றது.

போதைவஸ்து பாவனையால் ஏற்படும் விபரீதங்கள் குறித்து மாணவர்களுக்கு விழிப்பூட்டும் வகையில் இவ்விழிப்புணர்வு வீதி நாடகம் அமைந்திருந்தது.இந்நிகழ்வில் பாடசாலை மாணவ,மாணவிகள்,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கெல்விட்டாஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மாணவர்களுக்கான இவ் விழிப்புணர்வு வீதி நாடகம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வருடாந்த தேசிய இலக்கிய விழா



மட்டக்களப்பு

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய இலக்கிய விழா மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (20) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பாடசாலைகளின் பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட, அதி சிரேஷ்ட ஆகிய பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான வாய்மொழி மூலமான போட்டிகள் மும்மொழிகளிலும் இதன்போது இடம்பெற்றது.

இதன்போது கதை கூறுதல், கிராமியப் பாடல் இசைத்தல், கவி பாடல் போன்ற பல போட்டிகள் இடம்பெற்றன.

இப்போட்டியில் தெரிவுசெய்யப்படும் வெற்றியாளர்கள் தேசிய மட்டத்தில் தமது திறமையை வெளிப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



தியாகி திலீபனின் ஊர்திய கொண்டுவர பொலிசுட்ட பெமிசன் எடுக்கல்லையாம், இது நல்லிணக்கத்த கெடுக்கும் செயலாம் எண்டு அந்த படம் காட்டிற நம்மட தொண்டமான் ஐயாட வாரிசு கிழக்கு ஆளுநர் செந்தில் பொடியன் சொல்லிப்போட்டாரு எலுவா...?

அடே ஆருட்ட கேட்டும் அனுமதி எடுத்தும் எந்த கவன ஈர்ப்பும் செய்யிறது இல்ல எண்டது கூட உமக்கு தெரியல்லையா..?

அதுசரி நல்லிணக்கத்த கெடுக்கும் செயல் எண்டா எங்கடாம்பி அந்த நல்லிணக்கம் வாங்கலாம் கிலோ என்ன விலை எண்டதயும் ஒள்ளுப்பம் சொல்லன் பாப்பம்...!

உலக செய்திகள்

## 6.0 ரிச்டரில் அதிர்ந்த நியூசிலாந்து

நியூசிலாந்தின் தெற்கு தீவுப் பகுதியில் நேற்றுக் காலை 6.0 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும், இந்நிலநடுக்கத்தால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்தின் தெற்கு தீவுப் பகுதியில் அமைந்துள்ள ஜெரால்டின் நகருக்கு அருகே நேற்றுக் காலை 9.15 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 11 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் அதிர்வை சுமார் 14,000 மக்கள் உணர்ந்ததாகக் கூறப்படுகிறது.

## குழந்தைகளைத் தாக்கும் ரஷ்யா; கொதிக்கும் ஸெலென்ஸ்கி

போரின்போது குழந்தைகளை ரஷ்யா தாக்குகிறது - என உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் 78ஆவது ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தொடரில் உரையாற்றுகையிலேயே உக்ரைன் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவு உள்ளிட்ட பல விடயங்களை ஆயுதமாக்கி ரஷ்யா தாக்குதல்களை நடத்தி வருகிறது. போரின்போது குழந்தைகளை ரஷ்யா கடுமையாகத் தாக்குகிறது. ரஷ்யாவின் வோக்னர் என்ற கூலிப்படை அமைப்பின் தலைவர் பிரிகோஷின், விமான விபத்தில் கொல்லப்பட்டதில் புட்டினுக்கு தொடர்பிருக்கலாம்.

ரஷ்யா உலகை இறுதிப் போருக்குத் தள்ளும். அதேவேளை, எந்த நாட்டையும் தாக்கத் துணியமாட்டார்கள். உக்ரைனிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ரஷ்யா பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை நாடு கடத்தியது.

இந்தக் குற்றத்துக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் புட்டினுக்குப் பிடியாணை பிறப்பித்தது. நாங்கள் குழந்தைகளை வீட்டுக்குத் திரும்பப் பெற முயற்சிக்கிறோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம்

## கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

### பாரதப் பிரதமர் மோடி - ஜெய்சங்கர் ஆலோசனை





காலிஸ்தான் பிரிவினைவாதத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை விவகாரத்தில் இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஒட்டாவாவில் செய்தியாளர்களைச் சந்தித்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ,

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை விவகாரத்தில் இந்தியாவுக்கு எதிராக கனடா எந்தத் தூண்டுதலிலும் ஈடுபடவில்லை. இந்தியாவுடன் மோதல் போக்கு இல்லை. இந்திய அரசுடன் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை விவகாரத்தை முக்கியத்துவமளித்து இந்தியா அணுகவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கனடாவின் ஜனநாயகக் கொள்கைகளைப் பின்பற்றி, ஆதாரங்களின் அடிப்படையில் அமைதியாக இப்பிரச்சினையை கனடா கையாளும் என்றும் ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

**மோடி - ஜெய்சங்கர் ஆலோசனை**

இந்நிலையில், இந்திய புதிய பாராளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடியுடன் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மற்றும் மோதல் குறித்து ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

காலிஸ்தான் பிரிவினைவாதத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை விவகாரத்தால் இந்தியா மற்றும் கனடா ஆகிய இருநாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தியாவுடன் வர்த்தக மற்றும் அரசு ரீதியான உறவுகளைத் துண்டித்துள்ள கனடா அரசு, தமது குடிமக்களை காஷ்மீருக்கு செல்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

கனடாவில் வாழும் இந்தியர்கள், மாணவர்கள் உட்பட அனைவரையும் எச்சரிக்கையுடன் இருக்கும்படி இந்திய வெளியுறவு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

**வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தொடரும்**

இந்நிலையில், இந்தியாவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்று பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் கொலைக்கு ஆதரவாக கனடா அரசு இந்திய அதிகாரியை வெளியேற்றியதையடுத்து அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நட்பு நாடுகளிடம் இந்தியாவுக்கு எதிரான கருத்தை உருவாக்க முயன்று தோல்வியைத் தழுவியுள்ளது.

இந்தியாவுடன் வர்த்தக மற்றும் அரசு ரீதியான உறவுகளைத் துண்டித்துள்ளது கனடா அரசு. இந்நிலையில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் இந்தியாவின் வர்த்தக உறவுகளைத் துண்டிக்க ட்ரூடோ அரசு மேற்கொண்ட முயற்சிகள் நிறைவேறவில்லை.

**கனடாவாழ் இந்தியர்களுக்கு எச்சரிக்கை**

கனடாவில் வாழும் இந்தியர்கள், மாணவர்கள் உட்பட அனைவரையும் எச்சரிக்கையுடன் இருக்கும்படி வெளியுறவு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சின் எக்ஸ் (ட்விட்டர்) தளத்தில்,

''கனடாவில் அதிகரித்துவரும் இந்திய விரோத செயல்கள் மற்றும் அரசே மன்னித்துவிட்ட வெறுப்புக் குற்றங்கள், கிரிமினல் வன்முறைகள் ஆகியனவற்றைக் கருத்திற்கொண்டு கனடாவிலுள்ள அனைத்து இந்தியர்கள் மற்றும் அங்கு செல்லவிருக்கும் இந்தியர்களை உச்சபட்ச பாதுகாப்புடன் இருக்கும்படி எச்சரிக்கிறோம். அண்மைக்காலமாக அங்குள்ள இந்தியர்கள், குறிப்பாக, இந்திய எதிர்ப்புக் கொள்கைகளை எதிர்க்கும் இந்திய தூதரக அதிகாரிகள் குறிவைக்கப்படுகின்றனர். அதனால், கனடாவில் அச்சுறுத்தல் உள்ள பகுதிகளுக்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகின்றனர்'' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காஷ்மீருக்கு செல்வதைத் தவிர்க்குக!**

கனடா குடிமக்களை காஷ்மீருக்கு செல்வதைத் தவிர்க்குமாறு அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

காலிஸ்தான் பிரிவினைவாதத் தலைவர் கொலை விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், கனடா அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீரில் எதிர்பாராத சூழல் நிலவுவதாகவும், தீவிரவாத அச்சுறுத்தல், பயங்கரவாதம், கடத்தல் போன்ற பிரச்சினைகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

கனடா குடியுரிமை பெற்று அந்நாட்டில் வசித்துவந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் கொல்லப்பட்டார்.

கனடாவில் நடைபெற்ற கொலையில், இந்தியாவுக்கு தொடர்பிருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டியிருந்தார்.

கனடாவின் குற்றச்சாட்டை மறுத்துள்ள இந்தியா, இந்தக் குற்றச்சாட்டு அபத்தமானது மற்றும் உள்நோக்கம் கொண்டதென தெரிவித்துள்ளது.

கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாதத் தலைவர் ஹர்தீப்சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்குத் தொடர்பிருப்பதாக குற்றஞ்சாட்டியுள்ள அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இதன் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படும் இந்திய அரசு உயரதிகாரியொருவரை நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக கனடா வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி விடுத்த அறிக்கையில்,

''கனடா மண்ணில் கனடா குடியுரிமைப் பெற்றவரைக் கொலை செய்ததை ஏற்கமுடியாது. கனடாவின் இறையாண்மை விதிகள் மீறப்பட்டுள்ளன. இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்டோருக்கு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தூதரக அதிகாரியை கனடா வெளியேறும்படி உத்தரவிட்டுள்ள நிலையில் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவுக்கான கனேடிய தூதரக அதிகாரியை 5 நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான கனேடிய துணைத் தூதுவரை அழைத்த வெளியுறவு அமைச்சு, இந்தியாவிலுள்ள கனேடிய தூதுவரை வெளியேற்றும் முடிவைப் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுத் துளிகள்

ஐரோப்பிய கால்பந்து கிளப் அணிக்காக கோல் அடித்த முதல் இந்தியர் என்ற சாதனையைப் படைத்தார் மனிஷா கல்யாண். நடைபெற்றுவரும் யு.ஈ.எவ்.ஏ. மகளிர் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் விளையாடிய முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த மனிஷா கல்யாண், அப்பல்லோன் எப்சி மற்றும் ஜார்ஜியாவின் சாமேக்ரெலா எப்சி அணிகள் மோதின ஆட்டத்தில் கோல் அடித்து வரலாற்றில் இடம்பிடித்தார்.

---

இந்தியாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக் கிண்ணத்தொடரின் உத்தியோகபூர்வ பாடல் நேற்று வெளியிடப்பட்டது. சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட ரன்வீர் சிங் மற்றும் இந்திய பொலிவுட் இசையமைப்பாளர் ப்ரீதம் ஆகியோரால் உத்தியோகபூர்வமான தில் ஜாஷ்ன் போலே என்ற பெயரில் பாடல் வெளியிடப்பட்டது.

---

இந்தியாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான கோல்டன் டிக்கெட் நடிகர் ரஜினிகாந்துக்கு வழங்கப்பட்டது. இதனை பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய்ஷா நடிகர் ரஜினிக்கு வழங்கி கௌரவித்தார். இதற்கு முன்பு அமிதாப்பச்சன் மற்றும் சச்சின் டெண்டுல்கருக்கு இந்த கோல்டன் டிக்கெட் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

முதுகு வலியால் அவதிப்படும் இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜேசன் ரோய்க்குப் பதிலாக ஹெரி புரூக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். உலகக் கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணியிலிருந்து ஜேசன் ரோய் (33 வயது) நீக்கப்பட்டதன் மூலம், அவரது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டதாகவே கிரிக்கெட் வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

---

பிரான்ஸில் நடைபெற்றுவரும் றக்பி உலகக் கிண்ணத் தொடரில் குழு டியில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்து - ஜப்பான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் 34 - 12 என்ற புள்ளிகள் கணக்கில் இங்கிலாந்து வெற்றிபெற்று தொடரில் இரு வெற்றிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

## உலகக் கிண்ணம் வரை தலைமையில் தொடரும் சானக்க

ஏ. அகீல் சிஹாப்



இந்தியாவில் எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக் கிண்ணத் தொடர் வரை இலங்கை அணியின் தலைவராக சகலதுறை வீரர் தசுன் சானக்க தொடர்ந்து செயற்படவுள்ளார். இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை தெரிவித்தாக பிரபல இணையதளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தசுன் சானக்க தலைவராக இலங்கை ஒருநாள் அணிக்கு செயற்பட்டிருந்தாலும், தனிப்பட்ட ரீதியில் ஒரு துடுப்பாட்ட வீரராக தொடர்ந்து சொதப்பி வருகிறார். மேலும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கை அணி படுதோல்விடைந்தமையும் பாரிய விமர்சனங்களை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து புதிய தலைவர் நியமனம் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவினர் உட்பட முக்கிய அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு நீண்டநேரம் ஆராய்ந்த நிலையில் சானக்கவை தலைமையிலிருந்து நீக்குவது குறித்து பேசப்பட்டதுடன், ஒருநாள் அணியின் புதிய தலைவராக குசல் மெண்டிஸை நியமிக்கவும் வாய்ப்பிருந்ததாக சமூக வலைத்தளங்களில் செய்தி வெளியாது. இந்நிலையிலேயே உலகக் கிண்ணம் வரை தலைவராக தசுன் சானக்க தொடர்ந்து செயற்படுவார் என நேற்று மாலை தகவல் வெளியானது.

## பாஸ்போர்ட்டை ஹோட்டல் அறையில் வைத்துவிட்டு பஸ் ஏறிய ரோஹித்



ஏ. அகீல் சிஹாப்

2023ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியினர் ஞாயிற்றுக்கிழமை இரவு மும்பை நோக்கிப் புறப்பட்டனர். இதற்காக இந்திய வீரர்கள் கொழும்பில் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறையை காலி செய்தனர். அப்போது ரோஹித் சர்மாவைத் தவிர மற்ற வீரர்கள் அனைவரும் பஸ்ஸில் ஏறினர். கடைசியாக ரோஹித் சர்மா வந்தார்.

அப்போது அவர் தனது பாஸ்போர்ட்டை ஹோட்டல் அறையிலேயே வைத்துவிட்டு வந்துள்ளார். பஸ்ஸில் ஏறிய பிறகுதான் தனது பாஸ்போர்ட்டை ஹோட்டலிலேயே வைத்துவிட்டு வந்தது அவருக்கு ஞாபகம் வந்துள்ளது. இதனால், பஸ்ஸில் இருந்த சக வீரர்கள் அவரை கிண்டல் செய்துள்ளனர். இதனால் சில நிமிடங்கள் ரோஹித் பஸ்ஸின் படிக்கட்டுக்கு அருகிலேயே நின்றார்.

அதன் பிறகு ஒரு ஊழியர் ரோஹித் சர்மாவின் பாஸ்போர்ட்டை கொண்டுவந்து அவரிடம் கொடுத்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

## மாகாண மட்ட போட்டியில் பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலயத்துக்கு தங்கப்பதக்கம்

பொத்துவில் நிருபர்




கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் நீளம் பாய்தலில் பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலய மாணவன் எம்.எச்.எம்.நிப்றான் தங்கப் பதக்கத்தைப் பெற்று தனது பாடசாலைக்கும், வலயத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி அண்மையில் கந்தளாய் லீலாரத்ன விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றிய நிப்றான் 6.58 மீற்றர் தூரம் பாய்ந்து முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

பயிற்றுவித்த விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஏ.எச்.எம்.தபுறானி, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம்.எம்.சாஜின், பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ் உள்ளிட்ட ஆசிரியர்களுக்கும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் செயலாளர் எஸ்.எச்.தம்ஜீத் மற்றும் பாடசாலை சமூகத்தினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், மாகாண மட்டத்திலான சிறப்பு மெய்வல்லுநர் விருதையும் நிப்றான் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamiliansports@gmail.com






தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் இளைஞர் கழக அணி வெற்றிபெற்று அம்பாறை மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் கங்கா சாதுரியா, ஹைலண்ட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அதிபர் முகம்மது றியாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படம் - றியாஸ் இஸ்மாயில்)

## மர்ஹூம் எம்.ஐ.எம்.இக்பால் ஞாபகார்த்த சம்பியன் கிண்ணம் ஏறாவூர் யங் ஸ்டார் வசமானது

நிந்தவூர், பெரியநீலாவணை, அட்டப்பளம் செய்தியாளர்கள்



அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் அனுசரணையில் கல்முனை சனிமவுன்ட் விளையாட்டுக் கழகம் நடத்திய அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 22 முன்னணி உதைபந்தாட்டக் கழகங்கள் கலந்துகொண்ட மர்ஹூம் எம்.ஐ.எம்.இக்பால் ஞாபகார்த்த சம்பியன் கிண்ண மின்னொளி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கல்முனை சனிமவுன்ட் விளையாட்டுக் கழகத்தை 5:0 என்ற கோல் அடிப்படையில் ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதிப் போட்டிக்கு முன்னாள் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும், முன்னாள் கௌரவ கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸாக் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7